விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 09 திங்கட்கிழமை (22.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 124






## கொழும்பு, மட்டக்களப்பு உட்பட 8 இடங்களில் தற்கொலைத் தாக்குதல், குண்டு வெடிப்புகள்

உயிர்த்த ஞாயிறு பேரவலம்

# 35 வெளிநாட்டவர் உட்பட 218 பேர் பலி



மேலும் படங்கள் 12,13 ஆம் பக்கங்களில்...

## 452 க்கும் மேற்பட்டோர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு - மட்டக்களப்பு உள்ளிட்ட எட்டு இடங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தற்கொலைத் தாக்குதல் மற்றும் குண்டுகள் வெடித்தன. இதில் குறைந்தது 218 பேர் உயிரிழந்ததுடன் 452க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பு தொடர்பில் ஏற்கெனவே எச்சரிக்கப்பட்டது

(கொழும்பு)

இலங்கை குண்டுவெடிப்பு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது உண்மையென ஜனாதிபதியின் செயலாளர் ஹேமசிறி 23

## விசாரணை சி.ஐ.டியிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு பிரதேசங்களில் நேற்று நடந்த குண்டு தாக்குதல்கள் சம்பந்தமான விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்க பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் தெமட்டகொடை பகுதியில் நடந்த வெடிப்புச் சம்பவம் குறித்து விசாரணைகளுக்காக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். கொழும்பு பிரதேசத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்த கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து. 23

## நீர்கொழும்பில் தாக்குதலை நடத்தியவர்?



23

## தௌஹீத் ஜமாத் அமைச்சர் வெளியிட்ட பகீர் தகவல்



23

## தாக்குதல்தாரிகளின் வான் மீட்பு; வெள்ளவத்தையில் சாரதியும் கைது

(கொழும்பு)

கொழும்பில் குண்டுத் தாக்குதல்கள் நடத்திய சந்தேகநபர்கள் பயன்படுத்திய வான் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சிசிரிவி காணொலிகள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் வான் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

இதேவேளை, நேற்றைய தாக்குதல்களுக்கு காரணமான 23

## மட்டு. தேவாலய தாக்குதல் நபரின் தகவல் வெளியானது



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் ஓட்டமாவடியை சேர்ந்த உமர் என தனது பெயரை அடையாளப்படுத்திய சந்தேக நபரொருவரே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தக 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1973 * 10 * 21 | 2019 * 04 * 17 |



அமரர்

## நாகச்சந்திரன் சிவச்சந்திரன்

அன்பு நிறை ஆசானே! எங்கள் அகரத்தின் சொத்தே!
சிகரத்தில் நாம் நிற்க வழிகாட்டிய குருவே - எம்
அறியாமைப் பிணி தீர்க்கும் வல்லமை பட வைத்தது நம்மை
நோய் கொண்டு போனதோ!
நம்பமுடியவில்லை உம் மரணத்தை எம்மால்
சிரித்த முகமும் கணிரென்ற குரலும் - எம்
மனக்கண்ணில் நிழலாடுதே ஐயா!
இனி எங்கு நாம் உமைக்காண்போம்
வேதனை தாழவில்லை வெம்பி அழுகின்றோம்
விழி வழி நீர்முத்துக்களை சிந்தி விடை தருகின்றோம்
சென்று வாரும் ஐயா!
இனி நீர் சிவச்சந்திரன் இல்லை
சிவனது சந்திரன்
ஆன்ம அமைதி கொள்வீர்!

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

அகரம்

## அதிபர்களுடனான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்களுடன் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (மு-3)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## அன்பு வாசகர்களுக்கு

வலம்புரி புருசோத்தமனுக்கு கம்பவாரிதி இ.ஜெயராஜ் எழுதும் அன்பு மடல் நாளைய வலம்புரியில் வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். (ஆ-ர்)

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு சந்திரவரதன்

(சவுதி அரேபியா)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.12.1951 | 20.04.2019 |

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் பறாளாய் வீதி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சந்திரவரதன் 20.04.2019 சனிக்கிழமை அன்று சவுதி அரேபியாவில் காலமானார்.

அன்னார் அமரர்களான கார்த்திகேசு சின்னம்மாவின் புதல்வனும் அமரர் செல்வரத்தினத்தின் (ஆசிரியர் - கொழும்பு இராமநாதன் இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும் சஸ்மிலா (லண்டன்), சதுஷ்ஷா, சிந்துஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிரிதரன் (லண்டன்), கோபிதாஸ் (Krishna Cooling Point) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அஸ்ரனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (8545)

பறாளாய் வீதி,
சுழிபுரம்.


தகவல்:- குடும்பத்தினர்
077 710 6938

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## நாகச்சந்திரன் சிவச்சந்திரன்

(ஆசிரியர் - யாழ்.இந்துக் கல்லூரி)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நீண்டகாலமாக பொருளாளராக பாடசாலை நேரம் தவிர்ந்த கூடுதலான நேரத்தை பாடசாலை அபிவிருத்திக்கும் மாணவர் நலனுக்குமாக தன்னை முழுமையாக அர்ப்பணித்ததுடன் செல்லத்துரை இல்ல பொறுப்பாசிரியராகவும் செயற்பட்டு இன்று எம்மை விட்டு பிரிந்துள்ள அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானையும் ஞானலிங்கேஸ்வரப் பெருமானையும் வேண்டுவதுடன் அன்னாரின் குடும்பத்துக்கு எமது இதயபூர்வமான இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்.இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை சமூகம்.**

(6187)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் அசாதாரண நிலை
# அனைத்துப் பாடசாலைகளுக்கும் இரண்டு நாட்கள் விடுமுறை
## கல்வியமைச்சர் காரியவசம் அறிவிப்பு



(கொழும்பு)

**நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமையும் மற்றும் நாளை செவ்வாய்க்கிழமையும் மூடப் படுவதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அறிவித்துள்ளார்.**

இரண்டாம் தவணைக்காக இன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் இந்த சிறப்பு விடுமுறையை கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

கொழும்பு உள்ளிட்ட இடங்களில் நேற்று நடத்தப்பட்ட குண்டுவெடிப்புக்களையடுத்து ஏற்பட்டுள்ள பதற்றநிலையால் இந்த விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கோழைத்தனமான தாக்குதல்களையிட்டு நான் மிகவும் கவலையடைந்துள்ளேன்
## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் மட்டக்களப்பிலும் உள்ள தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களை குறிவைத்து நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதல்களையிட்டு நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவங்களுக்கு காரணமானவர்களை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கோரிக்கை விடுக்கின்றேன். இக் கோழைத்தனமான, துக்ககரமான தாக்குதல்களில் தம் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுடன் இணைந்து நிற்குமாறு இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். இத்தகைய கடும்போக்காளர்கள் இந்நாட்டினை பின்னிட்டு கொண்டு செல்லக்கூடாத படி, நாம் ஒன்றிணைந்து பலமாக நிற்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# வன்முறையாளர்கள் அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்
## வடக்கு ஆளுநர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வன்முறைகள் மூலம் வாழ்க்கையில் பல அனுபவங்களைக் கண்ட வடமாகாண மக்கள் சார்பில் வன்முறையாளர்கள் அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். வன்முறைகளை எந்த சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ள முடியாது என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை கண்டிக்கும் வகையில் நேற்று அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் மத ஸ்தலங்களிலும், ஹோட்டல்களிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கான கண்டனத்தையும், குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆளுநர் தெரிவித்தார்.

நாட்டில் நடைபெற்ற துக்ககரமான அசம்பாவிதங்களினால், கிறிஸ்தவ மக்கள் ஆழ்ந்த துக்கத்தில் இருக்கின்றார்கள். வடமாகாண ஆளுநர் கிறிஸ்தவ மக்களுக்கு முழுமையாகவும், விசேடமாக ஜனாதிபதி மற்றும் வடமாகாண மக்கள் சார்பில் ஆழ்ந்த துக்கங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

வன்முறை எந்த சமுதாயத்தினாலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஏற்றுக்கொள்ளக்கூடாத யுக்தி. வடமாகாண மக்கள் வன்முறையினால் வாழ்க்கையில் பல அனுபவங்களைப் பெற்றவர்கள். இன்று நடைபெற்றுள்ள இந்த இருளான நாளை ஒட்டி மன வருத்தம் அடைவதுடன், வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவ்வாறான வன்முறைச் சம்பவங்களுக்குப் பின்னால் உள்ளவர்களை அடையாளம் கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

பெற்றுக்கொண்ட சமாதானத்தை மீண்டும் இழக்க தயாராக இல்லை. எனவே, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உடனடியாக இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான விசேட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

எந்தவித வன்முறைக்கும் இடமளிக்காது இவ்வாறான வன்முறைக்கு ஆதரவளிக்கும் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்கக் கூடாது. இலங்கை மக்களுக்கு சமாதானம் உருவாக வேண்டும் என்றும், வன்முறைச் சம்பவங்களுக்கு இடமளிக்க வேண்டாமென்றும் மக்களை பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-101)

# வடமாகாண சபைக்கு உட்பட்ட அனைத்து அரச அலுவலகங்களுக்கும் இன்று விடுமுறை
## ஆளுநர் பணிப்புரை



வடமாகாண பாடசாலைகள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பாடசாலைகளுக்கும் கல்வியமைச்சால் இன்றும் நாளையும் விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் வடமாகாண சபைக்கு உட்பட்ட அனைத்து மாகாண அரச அலுவலகங்களுக்கும் இன்று திங்கட்கிழமை விடுமுறை வழங்குவதற்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பணிப்புரை விடுத்துள்ளார். (இ-101)

# குண்டுத் தாக்குதல்களுக்கு கோத்தபாய கண்டனம்!



(கொழும்பு)


நேற்று தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தக் குண்டுத் தாக்குதல்கள் கடுமையான வேதனை அளிப்பதாக கோத்தபாய தனது டுவிட்டர் பதிவொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

இந்த வேதனையான தருணத்தில் அனைத்து மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

இச் சம்பவத்தில் உயிரிழந்த அனைவரினதும் குடும்பங்களுக்கும் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என கோத்தபாய ராஜபக்ஷ தனது டுவிட்டர் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# நல்லூரில் பொலிஸார் பாதுகாப்பு





(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் நேற்று இடம் பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து ஆலயத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு நேற்று மதியம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை குண்டுவெடிப்புக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் கண்டனம்

இலங்கையின் சில தேவாலயங்கள் மற்றும் விருந்தகங்கள் சிலவற்றில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவங்களை பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு ஒன்று கூடியிருந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்கள் தொடர்பில் தமது அவதானம் திரும்பியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த துயரமான தருணத்தில் பாதிக்கப்பட்டவர்களுடன் இணைந்து இருப்பதாக பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்தார்.

இந்த வெடிப்பு சம்பவங்களில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்காக தான் பிரார்த்தனை செய்வதாக பாப்பரசர் குறிப்பிட்டுள்ளார். (மு-3)

# சகல பல்கலைக்கழகங்களும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தம்

நாட்டில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட அசம்பாவிதங்களை அடுத்து இலங்கையிலுள்ள சகல பல்கலைக்கழகங்களினதும் கல்வி நடவடிக்கைகள் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள், அதன் பின்னரான நிலைமைகளையடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த அனைத்து பரீடசைகளும் மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக் கழகப் பதிவாளர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-9)




5ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**கண்ணகைப்பிள்ளை மயில்வாகனம்**

தோற்றம்: 1924.10.13 மறைவு 2014.04.19

திதி: சித்திரைமாத சங்கடஹர சதுர்த்தி 22.04.2019

அன்புத் தெய்வமே ஆண்டுகள் ஐந்து போனதம்மா எங்களுடன் நீங்கள் வாழ்ந்த அழகிய நினைவுகளும் தங்கள் அன்பும் எங்களை வழிநடத்திச் செல்லும் தங்களை நேரில் காண இயலாது இருப்பினும் நீங்கள் எங்களுடனே எப்போதும் வாழ்கின்றீர்கள்

**மகன் குடும்பத்தினர்**

(C-6140) பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி


# இறப்பதற்கு சற்றுமுன் எடுத்த புகைப்படத்தை முகநூலில் பகிர்ந்த சமையல் கலை நிபுணர்!



சங்கரில்லா விடுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பிரபல தொலைக்காட்சி சமையல் கலை நிபுணர் சாந்தா மாயாதுன்னை மற்றும் அவரது மகள் ஆகியோரும் பலியாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இறப்பதற்கு முன்னர் அவர்கள் காலை உணவை எடுத்துக்கொண்ட படம் ஒன்றை முகநூலில் வெளியிட்டமையும் தெரிய வந்திருக்கிறது. (மு-3)




கண்ணீர் அஞ்சலி

அமரர்

**நாகச்சந்திரன் சிவச்சந்திரன்**

கொக்குவில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய இந்து இளைஞர் சபையின் முன்னாள் செயலாளர் **நாகச்சந்திரன் சிவச்சந்திரன்** அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயரடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய இந்து இளைஞர் சபை, கொக்குவில்**

(C-6188)



# மரண அறிவித்தல்

## தாமோதரம்பிள்ளை தர்மலிங்கம்

### (ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர்)



யாழ்.பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.50 கே.கே.எஸ். வீதி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் கடந்த (19.04.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வரதரட்ணராஜா-பூலோகநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தர்மநாயகி அவர்களின் அன்புக் கணவரும் திகழ்மதி (USA), ஜலஜா (Canada), லலிதினி(USA), சிவகுமார்(Norway), விக்கினேஸ்வரன் (Australia), கிருஷ்ணகுமார்(UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற குலேந்திரன்(V.M.K), பாலச்சந்திரா(Canada), கிருஷ்ணதாசன்(USA), தேவசேனை (Norway), ரோகினி(Australia), சாந்தி(UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான M.T.சுப்பிரமணியம், M.T.பொன்னம்பலம், தங்கம்மா, மனோண்மணி, M.T.திருநாவுக்கரசு, பராசக்தி, M.T.நடராஜா, M.T.சோமசுந்தரம் மற்றும் M.T.துரையப்பா அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, ஞானலட்சுமி, கதிரவேற்பிள்ளை, செல்லையா, சுகீர்தலிங்கம், மங்கையற்கரசி மற்றும் தனலட்சுமி, ராஜபூபதி, நாகபூபதி, காலஞ்சென்ற மகேஸ்வரன், மற்றும் ஸ்ரீகரன், குணசீலன், சோபனதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கார்த்திகா-சஞ்ஜீவ், அபராஜிதன்(V.M.K)-சர்மினா, பிரசோதிகா, மயூரிக்கா, தினேசியா, டர்சியா, அபிரா, வராகி, ஆர்த்திகா, அகினாஷ், அக்ஷி ஆகியோரின் அன்புப் பேரனும் மானவ், ஷ்ரவன் ஆகியோரின் ஆசைப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.04.2019) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் இல 50, கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


(C-6189)

இல.50, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

தொ.பேசி: 021 222 8063, 0777849369 (அபராஜிதன்-பேரன்)

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாவி பொதுமக்கள் மீதான மிலேசத்தனமான தாக்குதல்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது

## கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கண்டனம்

(கொழும்பு)

**அப்பாவி பொதுமக்கள் மீதான தாக்குதல்களை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

கத்தோலிக்க தேவாலயங்கள் மீதான குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு நேற்று நடைபெற்ற திருப்பலி பூஜைகளின் போது அப்பாவி பக்தர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதல்களை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இது ஓர் மிலேச்சத்தனமான தாக்குதல் எனவும் அவர் தெரிவித்தார்.

மானுட பண்புகளுக்கு முரணான வகையில் இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இச் சம்பவத்தில் உயிரிழந்த வர்களின் குடும்பங்கள் மற்றும் உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களை வெளியிடுவதுடன் அவர்களுக்காக பிரார்த்தனை செய்வதாகவும் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்.

## கணபதிப்பிள்ளை பத்மநாதன்

பிறப்பு 1946 - 07 - 19

இறப்பு 2019 - 03 - 23



சீர் பெருகு சித்தன் கேணியில்
சிறப்பு மிகு பணி செய்த செம்மையாளனே
நாம் துயருற்ற போது உன் கரம் தந்தாய்
தூணொக்க எமைத்தாங்கி துணை நின்றாய்
கணபதியின் திருவருள் பத்மநாதனே
நிமலன் திருவடியில் நீர் இருப்பீர்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(C-6185)

உம் பிரிவால் துயருறும்:
H.A.C இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்
ENGLISH PERSONAL CL
அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
T.P: 077 658 9443
(8541)
யாழ்ப்பாணம்

## கைகொடுக்கும் நண்பர்கள்

மனதில் சுமையா? உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம் உங்கள் துயரங்களையும் துன்பங்களையும் செவிமடுக்க நாங்கள் இருக்கிறோம். இரகசியம் பேணப்படும். எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

கைகொடுக்கும் நண்பர்கள்.
175, நாவலர் வீதி.
077 900 8776.

ஸ்ரீலங்கா சுமித்திரையோ
(8471)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


# இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி | செவ் | ராகு |
| சனி, குரு, கேது | சந் | | |

**22.04.2019**
சித்திரை 9, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திருதியை பிற்பகல் 2.29 மணிவரை
அனுசம் முன்னிரவு 7.39 மணிவரை
சுபநேரம் 12.01 - 01.31 மணிவரை
இராகுகாலம் 7.31 - 9.01 மணிவரை
சங்கட சதுர்த்தி விரதம்
வளவன்

**மீனம்**: மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மேடம்**: எதிர்பாராத வகையில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை, பண விரயங்கள் மேலோங்கும் நாள்.

**இடபம்**: உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்**: உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, ஆரோக்கியம் சீராகும், நன்மைகள் நடைபெறும் நாள், கடனை தீர்க்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்**: அன்பு நண்பர்கள் ஆதரவு தருவர், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்**: தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.

**மகரம்**: வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பலரது அன்புக்கும் பாத்திரமாவீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**சிம்மம்**: பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு**: பயணத்தால் பிரியமான ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், உடல் நலனில் சிறு இடையூறுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்**: சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், உறவினர் பகை அகலும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்**: பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய பாதை புலப்படும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், சாதுரியமான செயற்பாடுகளால் காரியம் சாதிப்பீர்கள்.

**கன்னி**: நீண்ட நாளைய பிணக்கொன்று நல்ல முடிவுக்கு வரலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், செயற்பாட்டில் தீவிரம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் இவ்வளவும் நடைபெறும் வரை புலனாய்வுத் துறையினர் என்ன செய்தனர்?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி



**(கொழும்பு)**

**நாட்டில் இவ்வளவு பாரிய வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறும் வரையில் புலனாய்வுத் துறையினர் எங்கிருந்தனர் என ஆளும் கட்சியான ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.**

நேற்றுக்காலை இடம்பெற்ற வெடிப்புச்சம்பவத்தையடுத்து நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

இடம்பெற்ற வெடிப்புச் சம்பவங்கள் சாதாரணமான ஒன்று அல்ல, நீண்ட காலம் திட்டமிட்ட ஒன்று. சந்தர்ப்பம் பார்த்து முன்னெடுக்கப்பட்டவை. இவ்வளவும் இடம்பெறும் வரையில் இந்நாட்டில் புலனாய்வுப் பிரிவினர் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு புலனாய்வுப் பிரிவு பதில் சொல்ல வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அமைதியாக செயற்பட வேண்டும்; வதந்திகளை நம்ப வேண்டாம்

### சபாநாயகர் கோரிக்கை



(கொழும்பு)

குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்து சபாநாயகர் கருஜெயசூரிய வெளியிட்டுள்ள தனது விஷேட செய்தியில் பல்வேறு விடயங்களை. சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தால் மேற்கொள்ளக் கூடிய அனைத்து நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


மற்றும் இந்த தேவாலயங்களை குறிவைத்தும், பொது மக்கள் அதிகம் நடமாடக் கூடிய முக்கிய இடங்களை குறி வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் அனைத்து மக்களும் சோகத்தில் உள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து வெளியிடப்படுகின்ற பொய்யான வதந்திகளை நம்பாமல் அனைவரும் அமைதியாக செயற்பட வேண்டும்.

இந்தச் திட்டமிட்ட சதித்திட்டக் காரர்களையும் அவர்களின் நோக்கம் குறித்தும் அறிந்துக் கொள்வதற்காக அனைவரும் விசாரணைகளை மேற்கொள்ள ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

நாட்டு மக்கள் அனைவரும் அமைதியாக செயற்படுவதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை குறித்து அவதானமாக இருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## பொலித்தீன் பாவனை வேண்டாம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் இன்று மாபெரும் ஊர்வலம்




(சாவகச்சேரி)

பொலித்தீனை விடுத்து அதற்குப் பதிலான மாற்றீடுகளுக்குத் தயாராகுமாறு சாவகச்சேரி வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி வருகின்றனர். இன்று திங்கட்கிழமை புவி தினத்தில் சாவகச்சேரி நகரில் பொலித்தீன் பயன்பாட்டுக்கு வர்த்தகர்களின் பூரண சம்மதத்துடன் தடை விதிக்கப் பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் பொலித்தீனுக்குப் பதிலாக (துணிப் பைகள்,வாழைஇலை) உள்ளிட்ட மாற்றீடுகளைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இன்று திங்கட்கிழமை காலை பொலித்தீனுக்கு எதிராக மாபெரும் ஊர்வலம் ஒன்றும் இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## இறை விசுவாசிகளை இலக்கு வைத்த கொடூரத்தை ஏற்க முடியாது



(கொழும்பு)

இறை விசுவாசிகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலை ஏற்றுக்கொள்ள முடியாதென, அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அமைதி, இன ஐக்கியத்தை பதற்றத்திற்குள்ளாக்கும் வகையில் கொழும்பில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்துள்ள அமைச்சர் றிசாத் பதியுதீன், அமைதிக்கு எதிரான சதிகாரர்களை அரசாங்கம் உடனடியாக அடையாளம் காண வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மற்றும் மட்டக்களப்பு தேவாலயத் தாக்குதல்கள் தொடர்பில் அமைச்சர் வெளியிட்டுள்ள கண்டனச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது,

முப்பது வருட யுத்தம் மிகப் பெறுமதியான விலைகொடுத்து முடித்து வைக்கப்பட்டது. இதற்குப் பின்னரான ஒரு தசாப்த கால நிசப்தத்தை தகர்க்கும் வகையில் இத்தாக்குதல்கள் உள்ளன.

மத உணர்வுகளையும். சிவிலியன்களின் சாதாரண வாழ்க்கையையும் இத்திட்டமிட்ட தாக்குதல்கள் அச்சுறுத்தியுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

## யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நீங்கள் க.பொ.த (சா/தர) பரீட்சையில் சித்தியடைந்தமை அல்லது சித்தியடையாமை பற்றி கருத்திற்கொள்ளாது க.பொ.த (உ/தர) பிரிவில் பயின்று **NVQ** தரச் சான்றிதழைப் பெறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.கல்லூரியில் மேற்படித் திட்டத்தின் கீழ் தொழிற்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீங்கள் 2017 ஆம் ஆண்டு அல்லது 2018 ஆம் ஆண்டு க.பொ.த (சா/தர) பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் தொழிற் கல்வியைத் தொடர்வதற்காக, அனுமதி விண்ணப்பப்படிவம் கல்லூரியில் 22.04.2019 அன்று முதல் பாடசாலை நேரத்தில் வழங்கப்படும்.

பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்துடன் க.பொ.த (சா/தர) பெறு பேற்று சான்றிதழ், பாடசாலை விடுகைப்பத்திரம், என்பன 29.04. 2019 இற்கு முன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மட்டுப்படுத்திய அனுமதியே வழங்கப்படவுள்ளதால் முன்னுரிமை அடிப்படையிலேயே மாணவர்கள் கல்லூரியில் இக்கற்கைநெறிக்கு உள்வாங்கப்படுவார்கள் என அதிபர் அறிவித்துள்ளார். (இ-7)

## சைக்கிள் தரிப்பிடம் அமைப்பு



ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சைக்கிள் தரிப்பிடம் அமைக்கப்பட்டு வருகிறது. பிரான்ஸ் நாட்டில் இயங்கும் புலம்பெயர் உறவுகளின் மையமான ஆவரங்கால் இந்து தமிழ் விருட்சத்தின் நிதிப் பங்களிப்புடன் இத் தரிப்பிடம் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-10-134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

# அமரர் திருமதி பாக்கியம் திருநாவுக்கரசு

## பிறப்பு:- 08.08.1938 இறப்பு:- 22.04.2018



ஊண் ஆகவும் உயிராகவும் உடலாகியும் எனது தாயாகவும் தாரமாகவும் 63 வருடங்கள் என்னை போற்றி மகிழ்ந்து ஆங்கில வைத்தியராகவும், ஆங்கில மொழி சட்ட பட்டதாரியாகவும், உயர்நீதிமன்ற சட்டத்தரணியாகவும், வாழ்வளித்து மகிழ்ந்த எனது பாக்கியத்தின் முதலாம் ஆண்டு நினைவு கூறி ஆத்ம சாந்தி பிராத்தனையில் ஈடுபட கங்கா நதியையும் காசிவிஷ்வநாத பெருமானையும் தரிசிக்க வாய்ப்பளித்த வேளையில், பின்வருமாறு சகல மக்களுக்காகவும் குறிப்பாக தமிழ் மக்களுக்காகவும் பிரார்த்தித்தேன். விபரம் பின்வருமாறு.

1. எனது படிப்புக்கு உதவிய ஆசிரியர்கள் அதிபர்கள் புத்தம் எழுதி உதவிய புண்ணியவான்கள் பாடசாலைக் கட்டிடம் அமைத்து உதவியோருக்கும் நன்றி கூர்ந்து எனது துணைவியாரின் பேரில் பிரார்த்தித்தேன்.

2. தமிழருக்கும் உலகுக்கும் எப்படியும் வாழலாம் என்று இல்லாமல் இப்படித்தான் வாழவேண்டும். 2000 வருடங்களுக்கு முன்பாகவே வழிகாட்டிய திருவள்ளுவப் பெருமானுக்கும் ஔவையார் ஆச்சிக்கும் சிவனடியே சிந்திக்க உதவிய நால்வர் பெருமக்களுக்கும் குறிப்பாக அழுதால் உன்னை பெறலாமே என்று இலேசான வழியை காட்டிய மாணிக்கவாசகப்பெருமானுக்கும் அருணகிரி பெருமானுக்கும் அபிராமி பட்டர் பெருமானுக்கும் சுப்பிரமணிய பாரதியாருக்கும் இவர்கள் தம் பெற்றோருக்கும் நன்றி கூறி பிரார்த்தித்தேன்.

3. யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள வன்மையையும் போதைமேல் வைத்த ஆசையையும் விளத்தி அவர்களுக்கு திருந்தி வாழ்வதற்கு மனம் உருகி பிரார்த்தித்தேன்.

4. 1947 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்த வேளையில் அப்போதைய தமிழ் தலைவர்களான சேர் பொன்னம்பலம் இராம நாதன், பொன்னம்பலம் அருணாச்சலம், செனட்டர் நடேசன் ஆகியோர் தமிழர்களுக்கு தகுந்த உரிமை பெற தவறிய வேளையில் பாகிஸ்தானை பிரித்து தரும் படி மொஹமட் ஜின்னா அவர்கள் ஆங்கிலேயரிடம் கேட்டுக் கொண்டார்கள். அப்படி கேட்க வேண்டாம் என்று அப்போதைய இந்திய தலைவர்களான டாக் டர் இராஜேந்திர பிரசாத், வல்லபாய் பட்டேல், இராஜாதி ஆகியோர் மொஹமட் ஹலி ஜின்னா அவர்களை முதலாவது இந்திய பிரதமராகவா அல்லது ஜனாதி பதியாகவோ இருக்குமாறு கூறிய வேளையில் இரண்டு காரியம் செய்தால் நீங்கள் நினைத்ததை நிறைவேற்றலாம். அதாவது எனது இருகண்களையும் அகற்றினால் நடக்கும்.

1.இஸ்லாம் 2. இஸ்லாமிய மக்கள்

மறுத்துரைத்து குறித்த பதவிகளை ஏற்க மறுத்தார். இவற்றையெல்லாம் தெரிந்த தமிழ் தலைவர்கள் ஆங்கிலேயரிடம் பிரிவினையோ அல்லது சமஷ்டிய ஆட்சியோ கூறியிருந்தால் கட்டாயமாக கிடைத்திருக்கும். மேற்கூறிய தமிழ் தலைர்கள் தங்கள் பதவிகளையும் வச திகளையும் சிங்கள தலைவர்களையும் திருப்திப்படுத்த முயன்றார்களே தவிர தமிழ் மக்களை புறக்கணித்து ஒதுக்கினார்கள். இந்த அவல நிலை தொடரக்கூடாது என்று எம் மக்களுக்காக என் துணைவியின் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் வேண்டினேன்.

### திதி:- வளர்பிறை சப்தமி

05. இந்நிலையில் 80 வயதாகியும் உயர் திரு நீதியரசர் விக்னேஸ்வரன் ஐயா அவர்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் உடல் தளர்ந்த நிலையிலும் தமிழ் மக்கள் மேல் வைத்த ஆர்வத்தையும் நேசத்தையும் தொடர்ந்து சுகத்துடன் செயற்பட எல்லாம் வல்ல காசி விஸ்வநாத பெருமானையும் விசாலாட்சி அம்பாளையும் கங்காதேவியையும் அவர் தம் சுகத்துக்காகவும் உரிமை பெற்ற தமிழினமாக தமிழ் மக்கள் வாழ வேண்டும் என்று சிறப்பாக பிரார்த்தித்தேன்.

06. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகளில் என்னைக் கவர்ந்த வலம்புரி நாளிதழுக்கான காரணம்.
1. அரசியல் நேர்மை 2. துணிவு
3. இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை ஆனவற்றில் இருந்து மேற்கோள்காட்டி எழுதும் ஆசிரியர் தலையங்கள் என்னை மிகவும் ஈர்த்தன.
இதன் மூலம் மக்களை இதிகாசங்களைப் பின்பற்றி வாழவழிகாட்டிய பத்திரிகையாக கவனித்தேன்.
இந்த கொள்கைகள் மேலும் வளரவும் ஆசிரியர் அவர்களுக்கும், வலம்புரி குடும்பத்தினருக்கும் சகல வித மான வசதியும் மேலும் உயர்ச்சியும் அடையவும் தமிழர் விடுதலைக்காக துணிவுடன் பணியாற்ற எல்லாம் வல்ல காசி விஸ்வநாத பெருமானையும் விசாலாட்சி அம்பாளையும் கங்கா தேவியையும் பிரார்த்தித்தேன்.

07.காணாமல் ஆக்கப்பட்டோரின் கவலை மேலீட்டால் பத்து வருடங்களாக கீழ்கோட்டிலும் எப்பில் நீதி மன் றத்திலும் (Magistrate Court), (Court of Appeal) (சுப்ரீம் Court) இலும் வாதாடி இரண்டு வாலிபர்களை திரு கோணமலை கடற் படையினரால் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் இலங்கை அரசியல் அமைப்பில் உயிரு க்கு உத்தரவாதம் இல்லை (Right to life). ஆனால் உயிருடன் இருப்பதற்கு 13 (4) உபபிரிவின் கீழ் (Right to live) உண்டு என்று வாதாடி மூன்று இலட்சம் ரூபாய் பிள்ளைகளின் தகப்பனுக்கு பெற்றுக் கொடுத்து அவர் வழக்கை நடத்தினேன். இவ் வழக் கின் தீர்ப்பு கொழும்பு நடேசன் சென்றல் மூலம் ஜெனிவா மனித உரி மைகள் ஆணையகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. இவ் வழக்கிற்கு உதவிய எல்லாம் வல்ல இறைவனையும் புத்தகங்கள் எழுதி ஆக்கமளித்தோருக்கு நன்றி கூறி என் துணைவியின் ஆத்மசாந்தி மூலம் வேண்டினேன். மேற்கொண்ட விபரங்களை 2005/1/340 SLR

08. என்னை கனவு மூலம் பதினேழு முறைக்கு மேலாக ஆங்கில மொழிமூலம் அறிவுரை கூறி சட்ட பட்ட தாரியாகவும் சட்டதரணியாகவும் ஆக்கிய நயினை நாகபூஷணி அம்பாளின் வாசிகசாலைக்கு அன்பளிப்பாக சுமார் 5 இலட்சம் பெறுமதியான ஆங்கில மொழி சட்ட புத்தகங்களும் வைத்திய புத்தகங்களும் அமைப்பு செலவாக (50000) ஆங்கில மொழி மூலம் சட்டம் பயிலும் மாணவர்கள் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் வாசிகசாலையில் புத்தகங்களைப் பெற்று பயனடையுமாறு வேண்டுகின்றேன்.

09.இவற்றைக் கூறுவது தற்பெருமைக்காகவோ அல்லது தொழில் நோக்கமாகவோ அல்லது அரசியல் நோக்க மாகவோ இல்லை என்பதை கூறும் வேளையில் எமது சமுதாயமும் எமது மாணவச் செல்வங்களும் சீரும் சிறப்பு மாக வாழ வேண்டும் என்ற பிரார்த்தனையே முக்கிய நோக்கமானது.

10. வலம்புரி ஆசிரியரின் ஒரு ஆசிரிய தலை யங்கத்தில் தருமரும் அவர் தம் நாயும் பற்றி எழு திய ஆசிரிய தலையங்கத்தில் நாயின் பெருமையை அறிந்தேன். நான் வளர்த்த நாய் நோயுற்ற வேளை யில் அதன் கண்ணில் அன்பு, பாசம், கருணை, நன்றியுணர்வு யாவையும் கண்டேன். எனவே காசி பிரார்த்தனையில் சிறப்பாக எனது நாயிற்கு பிண்டம் போட்டு மறுவாழ்வு சிறப்படைய பிரார்த்தித்தேன்.

11. இறைவனை காண விரும்பினால் நாய் மூலம் காண லாம். எந்த துன்பத்திலும் என்ன தீமை செய்தாலும் வெறுக் காமல் நன்றியுடனும் விசுவாசமாகவும் நடக்கும் சிறந்த பண்புடைய பிராணிதான் நாய்.
எந்நன்றி கொண்டாருக்கு உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொண்ட மகற்கு.
இக்குறல் நாயிற்கு அல்ல மனிதனுக்கு

**முக்கிய குறிப்பு**
2019.05.11 ஆம் திகதியன்று நாகபூஷணி அம்மன் கோயி லில் மதிய போசனம் வழங்க ஏற்பாடகியுள்ளது. அம் பிகை அடியார்கள் அவற்றில் பங்குபற்றி அம்பா ளின் ஆசியை பெற பிரார்த்திக்கின்றேன்.
இப்படிக்கு கணவர்.

டாக்டர் தியாகன் திருநாவுக்கரசு (LLB Cey)
உயர் நீதிமன்ற சட்டத்தரணி, Diploma தடையியல் விஞ்ஞானம், (Colombo Medical Faculty) கொழும்பு மருத்துவக் கல்லூரி, அகில இலங்கை சமாதான நீதவான்.
சத்தியப்பிரமாண ஆணையாளர்
(மேற்குறித்த தகைமைகளுக்கு உரிமையாளர் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்)

**கணவர், பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டன் (அமெரிக்கா)**
**மற்றும் குடும்பத்தினர்,**
**தியாகர் பதி, நயினாதீவு.**

(8543)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டு வெடிப்பு எதிரொலி

# புகையிரதங்கள், தனியார் பேருந்துகளில் பொதிகளைக் கொண்டு செல்லத் தடை

(கொழும்பு)
சகல பயணிகள் தனியார் போக்குவரத்து பேருந்துகளிலும் பொதிகளைக் கொண்டு செல்வதற்குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை கொழும்பு உள்ளிட்ட இடங்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து பயணிகளின் பாதுகாப்பு கருதியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நேற்றிலிருந்து தனியார் பேருந்துகளில் பொதிகளைப் பொறுப்பேற்க வேண்டாமென்றும் சாரதிகள் நடத்துநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் புகையிரதங்களிலும் பொதிகளைப் பொறுப்பேற்பது நிறுத்தப்பட்டுள்ளதாக புகையிரத நிலைய பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (இ-7)

## நாட்டில் தொடர் குண்டுவெடிப்பு

# முல்லைத்தீவு, வவுனியா தேவாலயங்களில் ஆயுதம் தாங்கிய இராணுவ பொலிஸ் பாதுகாப்பு





(முல்லைத்தீவு)
நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளையடுத்து முல்லைத்தீவின் அனைத்து தேவாலயங்களுக்கும் ஆயுதம் தாங்கிய இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை கொழும்பு, மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் உள்ள தேவாலயங்களில் இடம் பெற்ற குண்டுவெடிப்பையடுத்து பலர் பலியாகியுள்ளதோடு பலர் காயமடைந்துள்ளனர் .

இந்த நிலையில் நேற்றைய தினம் கிறிஸ்தவர்களின் உயிர்த்த ஞாயிறு தினம் கொண்டாடப்பட்டுவரும் நிலையில் முல்லைத்தீவில் உள்ள அனைத்து தேவாலயங்களிலும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் பாதுகாப்பை வழங்கியுள்ளனர்.

வவுனியாவிலுள்ள தேவாலயங்களிலும் பொலிஸார் மற்றும் விஷேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சமூக வலைத்தளங்கள் முடக்கம்

(கொழும்பு)
நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து நாட்டின் பாதுகாப்பிற்காக சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில் குறிப்பாக பேஸ்புக், வைபர் மற்றும் வட்ஸ் அப் ஆகிய சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களை மையப்படுத்தி போலியான தகவல்கள் பதிவேற்றப்படுகின்றமையினால் தற்காலிகமாக சமூக வலைத்தளங்களை முடக்க அரசாங்கத்தால் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தொண்டராசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இன்றும் நாளையும் நடைபெற இருந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு மறுதிகதி அறிவிக்கும்வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ-10)

# அரசியல் நோக்கங்களுக்காக திட்டமிட்ட குண்டு வெடிப்புக்கள்

## அமைச்சர் மனோ காட்டம்

(கொழும்பு)
குண்டு வெடிப்புச்சம்பவங்கள் அனைத்தும் அரசியல் நோக்கங்களுக்காக திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் குண்டுவெடிப்பு சம்ப வம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

மீண்டும் மீண்டும் நாட்டில் குழப்பத்தினை ஏற்படுத்த ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித் துள்ளார். இந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (இ-7)

## மனித குலத்திற்கு எதிரான

# காட்டுமிராண்டிச் செயலை கண்டிக்கின்றோம்

## சிறிதரன் எம்.பி.கண்டனம்




(கிளிநொச்சி)
மனித குதத்திற்கு எதிரான காட்டுமிராண்டித் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம். இலங்கையில் அப்பாவி மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலையிலிருந்து இலங்கையின் கொழும்பிலும் மட்டக்களப்பிலும் இடம்பெறும் அப்பாவி உயிர்களையும் மதஸ்தானங்களையும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கொடூரமான குண்டுத் தாக்குதல்கள், காட்டுமிராண்டித்தனமான சிந்தனையுள்ள மனித குலத்தை, மனித உயிர்களை மதிக்கத் தெரியாத வன்முறையாளர்களின் தாக்குதல் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இயேசுபிரான் மரித்து உயிர்த்தெழும் நாளில் பச்சிளம் பாலகர்களும் அப்பாவி மக்களும் இறைவனை நோக்கி இறைந்து இறையாசி வேண்டி நின்றவேளையில் மனிதாபிமானமற்ற கொடூர வன்மமான எண்ணமுள்ள வெறித்தனக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்களைக் கண்டிப்பதோடு இனியும் மக்கள் அவதானமாகவும் பக்குவத்தோடும் பொறுப்புணர்வோடும் நடக்க வேண்டிய தருணமாக இதை நினைத்துச் செயற்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.(இ-7)

# குண்டு வெடிப்புக்கள் கண்டனத்திற்குரியவை

## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)
இலங்கை மக்களை பெருந்துயரத்தில் தள்ளியுள்ள தொடர் குண்டு வெடிப்புக்களானது மனித குலத்திற்கு எதிரானதும் கண்டிக்கத்தக்கதுமான பயங்கரவாத தாக்குதலாகும். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்த மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் காயமடைந்துள்ள மக்கள் விரைவில் குணமடைவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு விஷேட ஏற்பாடுகளின் அடிப்படையில் செய்வதுடன் காயமடைந்த மக்களுக்கு தேவையான குருதிக் கொடை வழங்குவதற்கு நாடு தழுவிய ரீதியில் மக்கள் முன் வந்து இன பாரபட்சங்களுக்கு இடமளிக்காமல் வழங்கியிருப்பது போற்றத்தக்க மனித நேய உதவியாகும்.

தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான முழுமையான விசாரணைகள் எவ்விதமான பாரபட்சத்திற்கு இடமளிக்காத வகையில் முன்னெடுக்கப்பட்டு நாட்டில் அமைதி நிலை நாட்டப்படுவதுடன் மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சமும் பதற்றமும் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

பொதுமக்கள் தமது பாதுகாப்பையும் நாட்டின் அசாதாரண சூழலையையும் கவனத்தில் கொண்டு நிதானமாகவும் விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் என்றும் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் கொடூரமான நினைவுகளை மீள் திருப்பியுள்ளன

## தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த எச்சரிக்கை









(கொழும்பு)

**புனிதமான தேவாலயங்களை மையப்படுத்தி வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையானது கொடூரமான நினைவுகளை மீள் திருப்பியுள்ளன எனவும் இந்தத் தாக்குதல் சம்பவங்களால் தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.**

கொழும்பு, கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தனது அனுதாபங்களை தெரிவித்துள்ளார்.

கொச்சிக்கடை தேவாலய வெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தான் பிரார்த்தனை செய்வதாகவும், பொது மக்கள் மிகுந்த அவதானத்துடனும் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு உட்பட ஏனைய பிரதேசங்களில் இடம் பெற்றுள்ள குண்டு வெடிப்பு சம்பவங்கள் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

புனிதமான தேவாலயங்களை மையப்படுத்தி வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையானது கொடூரமான நினைவுகளை மீள் திருப்பியுள்ளன. தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் இதனூடாக ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் அனைத்து மக்களும் பொறுப்புடனும், ஒத்துழைப்புடனும் செயற்பட வேண்டும். இக்கட்டான நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்த்தன, மற்றும் பிரசன்ன ரணதுங்க ஆகியோரும் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இரத்தக் கண்ணீர் சிந்திய மாதா!



(களுத்துறை)

தென்னிலங்கையிலுள்ள தேவாலயம் ஒன்றில் மாதா சொரூபத்திலிருந்து இரத்தக் கண்ணீர் சிந்தியது.

களுத்துறை கட்டுகுருந்த பகுதியிலுள்ள தேவாலயம் ஒன்றில் நேற்று முன்தினம் மாலை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியிலுள்ள தூய பிலிப் மேரி தேவாலயத்தில் மாதா சிலை ஒன்றிலிருந்து கண்ணீர் வடிந்துள்ளது.

பெரிய வெள்ளி அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், இவ்வாறு இரத்தக் கண்ணீர் சிந்தும் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனைக் காண பெருந்தொகையான பக்தர்கள் மாதா தேவாலயத்திற்கு படையெடுத்து வருவதாக தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

## கலையரங்க திறப்பு விழா 26 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா கலையரங்கத் திறப்பு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகாமையில் இடம்பெறவுள்ளது.

இக் கலையரங்கை பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் திறந்து வைப்பார். சிறப்பு விருந்தினர்களாக முனைவர் அரு.கோபாலன் , முனைவர் எ.ரி.ஆரியரட்ண மற்றும் வண.கல்கந்த தம்மானந்த தேரர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2019-14.05.2019



இராசிநாதன் இலாபஸ்தானத்தில் யோசனைகள் வெற்றிபெறும்.

விகாரி வருடம் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அதுமட்டுமல்ல, இலாபாதிபதி குருவும் அங்கேயே சஞ்சரிக்கிறார். சந்திரன் நீங்கலாக அனைத்துக் கிரகங்களும் ராகு- கேதுக்களுக்கு மத்தியில் இடம் பெற்றிருக்கின்றன.

4, 9-க்கு அதிபதியான சுக்கிரன், உங்கள் இராசியில் வீற்றிருப்பது யோகம்தான். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இலாப ஸ்தானம் பலப்படுவதால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். சுறுசுறுப்புடன் செயற்பட்டுச் சுகங்களையும், சந்தோஷங்களையும் வரவழைத்துக் கொள்வீர்கள்.

சுக ஸ்தானத்தில் செவ்வாய் வீற்றிருக்கிறார். சுகாதிபதியான சுக்கிரன் உங்கள் இராசியிலேயே பலம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை அகலும். மருத்துவச் செலவு குறைந்து மகிழ்ச்சியடைவீர்கள். தாய் வழி ஆதரவு திருப்தி தரும். எப்போதோ வாங்கிப் போட்ட சொத்துக்கள் இப்பொழுது நல்ல விலைக்கு விற்பனையாகும். அதை தொழிலுக்கு மூலதனமாக்கிக் கொள்வீர்கள். உங்களின் வீடுகட்ட வேண்டும் என்ற ஆசை நிறைவேறப் போகிறது.

படிப்பை முடித்தும் இன்னும் வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்கும். அரசுவேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அதுவும் கைகூடும். ஒரு சிலருக்கு வேலை நிரந்தரமாகும். நீங்கள் மகிழ்ச்சியின் எல்லைக்கே போகப் போகிறீர்கள். உறவினர்கள் பகை மாறும். உதா சீனப்படுத்தியவர்கள் உங்களோடு வந்து உறவாடப் போகிறார்கள். பெற்றோர்கள் நம்மீது பாசம் காட்டமாட்டார்களா? என்று ஏங்கிய நிலை இனி மாறும்.

அட்சய திருதியை நாளில் அஷ்டலட்சுமி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமை தோறும் லட்சுமியை வழிபடுவதன் மூலம் வளர்ச்சி கூடும்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஏப்ரல் 16 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்கிறார். அது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். பாக்யாதிபதி உச்சம் பெற்றிருக்கும் இந்த நேரம் பணப்புழக்கம் அதிகரிக்கும். மனக்கலக்கம் அகலும். இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மனதளவில் நினைத்ததை மறுகணமே செய்துமுடிக்க சந்தர்ப்பங்கள் கூடி வரும். மாங்கல ஓசை மனையில் கேட்பதற்கான

## வருடத் தொடக்கம் விரயங்கள் அதிகம்

அறிகுறிகள் தென்படும். மே 11ஆம் திகதி மேஷத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்தபடி தொழில் ஸ்தானத்தையும் பார்க்கப் போகிறார். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் கிடைக்கலாம். வெளிநாட்டு அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா என்று சிந்திக்கும் நேரமிது.

### பொன்னான புதன் சஞ்சாரம்

உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்குபவர் புதன். அவர் ஏப்ரல் 26 ஆம் திகதி மேஷத்திலும், மே 12ஆம் திகதி ரிஷபத்திலும் சஞ்சரிக்கப் போகிறார். மேஷத்தில் சஞ்சரிக்கும் பொழுது புத-ஆதித்ய யோகம் செயற்படப் போகிறது. பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக




வந்துசேரும். மதிப்பும், மரியாதையும் உயரும்.

பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தடம் மாறிச் சென்ற நண்பர்கள் தானாக வந்து இணைவர். உடல் ஆரோக்கியம் சீராகும். உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். ரிஷப புதனின் ஆதிக்கத்தில் மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

மே 7ஆம் திகதி மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். சகாய ஸ்தானாதிபதி செவ்வாய் பஞ்சம ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது பூர்வீகச் சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகளுக்கு உரிய கடமைகளைச் செய்ய முன்வரும் நேரம் இது. கல்யாணச் சீர்வரிசை பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்து வீர்கள். புகழ், கீர்த்தி அதிகரிக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

இம்மாதம் குரு வழிபாடும், சனிக்கிழமை அனுமன் வழிபாடும் சந்தோஷத்தை நிலைக்க வைக்கும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இம்மாதம் இலாப ஸ்தானம் பலப்படுவதால் பொருளாதார நிலை உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். மனக்கசப்புகள் அகலும். அத்தியாவசிய, ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன் - மனைவி க்குள் ஒற்றுமை பலப்படும். அன்பும், பாசமும் அதிகரிக்கும். தாய் வழி உறவு திருப்தி தரும். தடைகள் அனைத்தும் தானாக விலகும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறை வேற்று வீர்கள். புகுந்த வீட்டிற்கும், பிறந்த வீட்டிற்கும் பெருமை ஏற்படும் வகையில் நடந்து கொள் வீர்கள். பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய வழிவகை செய்வீர்கள். பக்கத்து வீட்டார் பகை மாறும். பணிபுரியும் இடத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்துகொள்வர். வியாழக்கிழமை குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சித்ரா பவுர்ணமி நாளில் மலைவலம் வருவதோடு சித்திரகுப்தன் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம் சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் குரு பகவான் 10ஆம் இடத்தில் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார். 10இல் குரு நின்றால் பதவி மாறும் என்பார்கள். அதே நேரம் தொழில் ஸ்தானம் எனப்படும் 10ஆம் இடத்தில் சனியும், கேதுவும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். மூன்று கிரகங்கள் தொழில் ஸ்தானத்தில் வீற்றிருக்க மாதத் தொடக்கம் அமைவதால் இம்மாதம் எதிர்பார்த்தபடியே தொழிலில் லாபம் கிடைக்கும். புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொண்டு பொருளாதார நிலை உயரும். கடன்சுமை குறையப் புதிய வழி பிறக்கும். கடல் தாண்டிச் சென்று தொழில் புரிய வேண்டுமென்று விரும்பு பவர்கள் அதற்காக எடுத்த முயற்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் வேலையை இராஜினாமா செய்துவிட்டு விருப்ப ஓய்வில் வெளிவரலாமா? என்று சிந்திப்பர். புதிய திருப்பங்கள் ஏற்படும் மாதம் இது.

உங்கள் இராசியிலேயே புதன் நீச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். 4, 7-க்கு அதிபதியான புதன் நீச்சம் பெறும் பொழுது நன்மைகள் உங்களுக்கு அதிகம் கிடைக்கும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வலிமை இழக்கும் பொழுது யோகத்தைக் கொடுக்கும். எனவே மாமன், மைத்துனர் வழியில் அனுகூலங்கள் ஏற்படும். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும். இடம், பூமி வாங்குவதில் இருந்த பிரச்சினைகள் மாறும். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர். சகோதரர்கள் சகாயமாக நடந்து கொள்வர்.

சுக ஸ்தானத்தில் இராகு சஞ்சரிக்கிறார். 'இராகுவைப் போல கொடுப்பானுமில்லை' என்பது பழமொழி. அப்படிப்பட்ட இராகுவை 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் பார்க்கிறார். குரு பார்வையால் இராகு புனிதமடைவதால் சந்தோஷ வாய்ப்புகளை அதிகம் சந்திப்பீர்கள். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்ய ஆர்வம் காட்டுவீர்கள். சுக ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் வீட்டைப் பழு துபார்க்கும் எண்ணம் மேலோங்கும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்க முயற்சிப்பவர்களுக்கு அதுகைகூடும். பெற்றோர்களின் ஒத்துழைப்போடு பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். பழைய கடன்கள் பைசலாகும். பங்காளிப் பகை மாறும்.

சஷ்டி திதியன்று கவசம் படித்துக் கந்

## நினைத்தது நிறைவேறும் மாதமிது

தனை வழிபடுவதன் மூலம் புதிய முயற்சிகளில் வெற்றிகாண இயலும்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

ஏப்ரல் 16ஆம் திகதி மீன இராசியான உங்கள் இராசிக்கு சுக்கிரன் வருகிறார். அது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். உங்கள் இராசியில் இருக்கும் புதனோடு அவர் சேருவதால் புத-சுக்கிர யோகம் உருவாகிறது. மேலும் நீச்சமான புதனோடு உச்சமான சுக்கிரன் சேருவதால் நீச்சபங்க ராஜ யோகம் செயற்படுகிறது. இதன் விளைவாக உங்களை விட்டு விலகிச் சென்ற உடன்பிறப்புகள் மீண்டும் வந் திணைவர். தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். மே 11ஆம் திகதி மேட இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அஷ்டமாதிபதி சுக்கிரன் தன ஸ்தானத்தில் சஞ்சரித்து அஷ்டம ஸ்தானத்தைப் பார்ப்பதால் இழப்புகளை ஈடுசெய்யப் புதிய வாய்ப்புகள் உருவாகும். இடமாற்றங்களும், பதவி மாற்றங்களும் எதிர்பாராத விதத்தில்




வரலாம். மறதியால் நின்றுபோன காரியங்களை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

### பொன்னான புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 26ஆம் திகதி மேட இராசிக்குப் புதன் செல்கிறார். அதன் பிறகு மே 12ஆம் திகதி ரிஷப இராசிக்குச் செல்கிறார். இதன் விளைவாக குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். கடன்சுமை அகல புதிய வழிபிறக்கும். கடன் சுமையில் இருந்த தொய்வு அகலும். இடம் வாங்க வேண்டும், வீடுகட்டவேண்டும் என்று நீங்கள் ஏதேனும் திட்டம் தீட்டியிருந்தால் அதற்கு சாதகமான பலன் தரும் நேரம் இது. புண்ணிய காரியங்களுக்கும் பொருளாதார உதவி செய்வீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

மே 7ஆம் திகதி மீன இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 4ஆம் இடத்தில் அர்த்தாஷ்டமச் செவ்வாயாகச் சஞ்சரிக்கப் போகிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை உருவாகலாம். அடிக்கடி மருத்துவச் செலவுகள் ஏற்படும். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. வாங்கி சொத்துக்களால் பிரச்சினைகள் ஏற்படும். இந்த காலகட்டத்தில் வழிபாடுதான் வளர்ச்சி கூட்டும். இம்மாதம் வியாழன் தோறும் குரு வழிபாட்டையும், செவ்வாய் தோறும் துர்க்கை வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இந்த மாதம் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். இடம், வீடு வாங்கும் முயற்சிகள் எளிதில் நிறைவேறும். கடன்சுமை பாதிக்குமேல் குறையும். கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும். பிரச்சினையில் இருந்து விடுபடுவீர்கள். 4இல் இராகு இருப்பதால் குடும்பத் தகவல்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். பிள்ளை களால் பெருமைசேரும். அவர்களு க்கு காலாகாலத்தில் கல்யாணம் செய்ய வேண்டுமே என்ற கவலை அகலும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சியில் அனுகூலம் கிடைக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் துணைநிற்கும்'


# பயங்கரவாத சம்பவத்திற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## பிரதமர் மோடி கண்டனத்துடன் வலியுறுத்து

இலங்கையில் நேற்று இடம் பெற்ற தொடர்ச்சியான குண்டு வெடிப்புக்களை வன்மையாக கண்டிப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களுடன் இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் துணை நிற்கும் எனவும், இந்த கொடூர பயங்கரவாத சம்பவத்திற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் அந்த பதிவில் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தப் பதிவினை அவர் சிங்களத்திலும் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)







## இலங்கையை உலுக்கிய

# குண்டுவெடிப்பு சம்பவங்கள் இதயத்தை நொறுக்குகிறது

## மு.க.ஸ்டாலின் கண்டனம்



(சென்னை)

இலங்கை தலைநகர் கொழும்பில் நேற்று அடுத்தடுத்து நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தலைநகர் கொழும்பில் நேற்று அடுத்தடுத்து நிகழ்ந்த 7 குண்டுவெடிப்பு சம்பவங்களில் பலர் உயிரிழந்தனர். பலர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் இக் குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தனது பேஸ்புக் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், 'இலங்கையில் நிகழ்ந்துள்ள குண்டுவெடிப்பு சம்பவங்களும், உயிர்ப்பலிகளும் இதயத்தை நொறுக்குகிறது. இதன் பின்னணியில் உள்ள மதவெறி - இனவெறி உள்ளிட்ட எந்தவிதமான சக்திகளாக இருந்தாலும் அடையாளம் கண்டு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

மனிதநேயத்திற்கு விடப்பட்ட சவாலை மனிதாபிமான சக்திகள் முறியடிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார். (7)

# புனித வெள்ளிப் பிரார்த்தனையின்போது தேவாலயச் சுவர் இடிந்து 15 பேர் பலி!

## தென்னாபிரிக்காவில் சம்பவம்

(கேப் டவுன்)

தென்னாபிரிக்கா நாட்டின் கடலோர மாகாணத்தில் சிறப்புப் பிரார்த்தனையின்போது தேவாலயத்தின் சுவர் இடிந்து விழுந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர்.



தென்னாபிரிக்க நாட்டின் கடலோர மாகாணங்களில் ஒன்றான குவாசுலு-நாட்டால் மாகாணத்தில் பழம்பெருமை மிக்க பெந்தகொஸ்தே தேவாலயம் ஒன்றுள்ளது.



இந்த தேவாலயத்துக்கு தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா கடந்த ஆண்டு வந்தபோது சிதைவடைந்து வரும் இந்த தேவாலயத்தை புதுப்பித்து தருமாறு இப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டனர்.

இந்த மாகாணத்தில் சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்துவரும் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த தேவாலயத்தில் புனித வெள்ளிக்காக சிறப்புப் பிரார்த்தனை நடைபெற்றது. அப்போது மழை நீரில் நனைந்திருந்த தேவாலயத்தின் சுவர் திடீரென்று இடிந்து விழுந்தது.

இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

# மெக்சிக்கோவில் துப்பாக்கிச்சூடு குழந்தை உட்பட 13 பேர் மரணம்

(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோ நாட்டின் வேராகர்ஸ் மாநிலத்தில் நடைபெற்ற குடும்ப விழாவில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குழந்தை உட்பட 13 பேர் பலியானது சோகத்தை ஏற்படுத்தியது.

மெக்சிக்கோ நாட்டின் வேராகர்ஸ் மாகாணம் அமைந்துள்ளது. வேராகர்ஸ் மாநிலத்தில் உள்ள மினாடிட்லன் நகரில் நேற்று முன்தினம் குடும்ப விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது ஒரு மர்ம நபர் திடீரென அங்கு புகுந்தார்.

அவர் அங்கிருந்தவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுடத்தொடங்கினார்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு குழந்தை, 5 பெண்கள், 7 ஆண்கள் என மொத்தம் 13 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர்.

மேலும் 4 பேர் படு காயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தகவலறிந்து பொலிஸார் அங்கு விரைந்து சென்றனர். காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தியது குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (7)

# லொறி மீது பஸ் மோதி விபத்து 7 பேர் பலி; 35 பேர் படுகாயம்




இந்தியாவின் உத்தர பிரதேசத்தின் மெயின்புரி அருகே ஆக்ரா-லக்னோ விரைவு வீதியில் பஸ்ஸொன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் இச் சம்பவத்தில் மேலும் 35 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தடுத்து குண்டுவெடி






கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம்








நீர்கொழும்பு, கட்டான கட்டுவப்பிட்டிய தேவாலயம்























ஷங்ரி-லா உண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்பு; அதிர்ந்தது கொழும்பு!















ா உணவு விடுதி



சினமன் கிராண்ட் உணவு விடுதி



கிங்ஸ்பெரி உணவு விடுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்திற்கு எதிராக அனைவரும் அணிதிரளுங்கள்

## நாமல் எம்.பி.அழைப்பு

**(கொழும்பு)**

**பயங்கரவாதத்திற்கு எதிராக அனைவரும் அணி திரள வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.**



நாட்டில் நேற்றுக் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்கள் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டிருந்தன.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

வெடிப்புச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்காக இறைவனைப் பிரார்த்தனை செய்ததாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகளுக்கு நிரந்தர ஆவணங்கள்

## கயந்த கருணாதிலக தெரிவிப்பு



(கொழும்பு)

மானிய அடிப்படையில் பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அரச காணிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்குவதற்கான காணி சட்ட வரைபை அரசாங்கம் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.

காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக இச்சட்ட வரைபை முதலாவது வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். இந்த சட்ட வரைபு எதிர்வரும் ஏழு வருடங்களுக்கு அமுலில் இருக்கும். இப்புதிய சட்டம் மூலம் 10 வருடங்களுக்கு முன்னர் மானிய அடிப்படையில் காணியை பெற்றுக் கொண்டவர்கள் நன்மையடைவர்.

அத்துடன் இச்சட்டத்துக்கமைய வெவ்வேறு வகை காணிகள் மற்றும் காணிக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்களும் ஆகக்கூடியது ஐந்து ஏக்கர் வரையான காணிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இச்சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக 20 பேர் கொண்ட குழுவொன்று செயற்படும். அதில் அமைச்சின் செயலாளர்கள், நிறுவனத் தலைவர்கள், ஜனாதிபதி மற்றும் பிரதமரால் நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளடங்குவர்.

இது தொடர்பில் கிடைக்கும் விண்ணப்பங்கள் குறித்து இக்குழு காணிகள் அமைச்சருக்கு தமது சிபாரிசை முன்வைக்கும்.

அதன் பின்னர் அமைச்சர் தெரிவு செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரங்களை ஜனாதிபதிக்கு முன்வைப்பார்.

ஜனாதிபதி அனுமதி வழங்கியவுடன் அவை காணி பதிவில் பதிவு செய்யப்படும்.

இதனடிப்படையில் காணி உரிமையாளர் தனது காணியை வாரிசுக்கு வழங்க முடியும். அல்லது அனைத்து வாரிசுகளதும் சம்மதத்துடன் காணியை விற்பனை செய்யவும் முடியும்.

எனினும் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட காணி இன்னுமொரு விவசாயிக்கு மட்டுமே விற்பனை செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# நாட்டின் பொது நிதியங்கள் அனைத்தும் திறைசேரியின் நேரடிக் கண்காணிப்பில்

பொது நிதியங்கள் அனைத்தும் திறைசேரியின் நேரடி மற்றும் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்படவுள்ளது. இதற்கான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந் நிதியங்கள் அரசின் பல்வேறு நிறுவனங்கள் ஊடாக சட்டரீதியாகவும் சட்டப்பூர்வமற்ற வகையிலும் வெவ்வேறு இலக்குகளை வெற்றிக்கொள்வதற்கு செயற்படுத்தப்படுகிறது.

அதன் பிரகாரம் அனைத்து பொது நிதியங்களும் வினைத்திறன்மிக்க வெளிப்படைத்தன்மையுடனான சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் மாற்றியமைக்கப்படுமென நிதி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களால் தற்போது செயற்படுத்தப்படும் நிதியங்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு உட்பட்ட பொதுவான நிதியமாக மாற்றியமைக்கப்படும் பட்சத்தில் அரசாங்க நிதிக்கொள்கை தரமானதாக மாறும் என்பதுடன் அதன் வினைத்திறன் தன்மை பாரிய அளவில் அதிகரிக்கும் என்பதால் இது மிகவும் நன்மையை தரக்கூடிய செயற்பாடாக அமையும்.

அரச பொது நிதியங்களை திறைசேரியின் நேரடி மற்றும் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தும் பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்கான சிபாரிசுகளை முன்மொழிவதற்கான குழு 2016 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இக் குழுவின் சிபாரிசுகளின் பிரகாரம் தற்போது வரை 12 அரச நிதியங்கள் வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அரச நிதியங்கள் எதிர்காலத்தில் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பில் அவற்றை செயற்படுத்தி வரும் அமைச்சுகளுடன் திறைசேரி அதிகாரிகள் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (7)

# புனித திரிபீடகத்தை உலக மரபுரிமையாக பிரகடனப்படுத்துவதற்கான பிரேரணை

பௌத்தர்களின் புனித நூலான திரிபீடகத்தை உலக மரபுரிமைச் சொத்தாக பிரகடனம் செய்யும் பிரேரணை எதிர்வரும் நான்கு மாதங்களுக்குள் யுனெஸ்கோ நிறுவனத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தொல்பொருள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் P.B. மண்டாவெல தெரிவித்துள்ளார்.

இந்த பிரேரணையை சமர்ப்பிப்பதற்காக 15 பேர் அடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

புத்திஜீவிகள் குழுவின் யோசனைகள் அடங்கிய பிரேரணையை ஆராய்ந்ததன் பின்னர் திரிபீடகம் உலக மரபுரிமைச் சொத்தாக பிரகடனப்படுத்தப்படும் என்று தொல்பொருள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உடம்புக்கு உதவுங்கள்

இந்த உலகத்தில் தூங்கிக் கெட்டுப் போனவர்களும் உண்டு. தூங்காமல் கெட்டுப் போனவர்களும் உண்டு. முழித்துக்கொண்டிருக்க வேண்டிய நேரத்தில் தூங்குவதும் தவறு, தூங்க வேண்டிய நேரத்தில் முழித்துக்கொண்டிருப்பதும் தவறு.

இரவு முழுவதும் தூங்காமல் முழித்துக்கொண்டிருந்துவிட்டு காலையில் வெளிக்கிட்டு... நான் கார் ஓட்டிக்கொண்டு கன்னியாகுமாரிக்குப் போகிறேன் என்று சொன்னால்... அவர் என்ன கன்னியாகுமாரிக்கா போவார்? வேறு எங்கேயாவது போய்விடுவார்!

அமெரிக்காவில் நடந்த ஒரு ஆய்வின்படி வீதி விபத்துக்கள் குறிப்பிட்ட சில நேரத்தில் தான் அதிகமாக நடக்கின்றதாம்! அதாவது, அதிகாலை நேரம் 2 மணியிலிருந்து 7 மணி வரைக்கும்! பின்னர் மதிய வேளை 2 மணியிலிருந்து 5 மணி வரைக்கும்! ஏன் இப்படி? சில விஞ்ஞானிகள் என்ன சொல்கிறார்கள் என்றால்... மனித உடம்பில் இந்த நேரங்களில் நரம்பு மண்டலங்களின் செயற்பாடு கொஞ்சம் குறைச்சலாவே இருக்குமாம்! அதனால் இந்தச் சமயங்களில் எந்த வேலை செய்தாலும் கவனக்குறைவு இருக்கும். தீர்மானம் எடுக்கும் திறமையும் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும்!

மேற்கு ஜேர்மனியில் இரண்டு ஆராய்ச்சியாளர்கள் இதைப் பற்றிய சில விபரம் எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள்! மதிய வேளைகளில் உடம்புடைய உஷ்ணம் கொஞ்சம் குறையுமாம். அதாவது, Basal Metabiloc Rate கொஞ்சம் குறைந்து உடம்பு ஓய்வு எடுப்பதற்குத் தயாராக இருக்கும். அதனால் அந்த நேரத்தில் கொஞ்சம் ஓய்வு எடுப்பது நல்லதுதான்.

சரி... ஒரு மனிதன் எவ்வளவு நேரம் தூங்க வேண்டும் என்பதற்கு ஒரு அளவு உண்டு. பிறந்த குழந்தைகள் 18 இலிருந்து 20 மணி நேரம் தூங்க வேண்டும். பாடசாலை போகும் குழந்தைகள் 12 இலிருந்து 14 மணி நேரம் வரைக்கும் தூங்க வேண்டும்! பாடசாலையில் இல்லை, போய் வந்ததற்கு பின்னர்!

பெரியவர்கள் 7 இலிருந்து 9 மணி நேரம் தூங்கவேண்டும்! பொதுவாக யாருக்கு தூக்கம் கெட்டுப் போகிறது தெரியுமா? இந்த Shift இல் வேலை செய்பவர்களுக்குத்தான்! இரவு Shift இல் வேலை செய்துவிட்டு காலையில் வீட்டுக்குப் போனவுடனே தூங்க முடியாமல் பையை தூக்கிக்கொண்டு மார்க்கெட்டுக்கு ஓடுபவர்கள் எத்தனை பேர்?

நாம் முன்னர் சொன்னது போல் நரம்பு மண்டலம் கொஞ்சம் குறைவாகச் செயற்படும் நேரங்களில் தான் மிகவும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டியிருக்கும். என்ன செய்வது முக்கியமாக வாகன ஓட்டுநர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

"இன்றைக்கு இரவு டியூட்டிக்கு வந்தேன். அப்படியே இருந்து காலை டியூட்டியையும் முடித்துக்கொண்டு போய்விடுகிறேன்!" என்று சொல்லக்கூடாது. இதற்கு ஒரு விஞ்ஞான காரணம் இருக்கிறது. ஒவ்வொரு மனித உடம்பிலேயும் ஒரு மெக்கானிசம் இருக்கிறது. Biological Clock, அது இருப்பதனால் தான் குறிப்பிட்ட நேரத்தில் தூக்கம் வருகிறது, குறிப்பிட்ட நேரத்தில் முழிப்பு வருகிறது!

Shift ஐ உங்கள் இஷ்டப்படி மாற்றிக்கொண்டிருந்தால் உடம்பு மிகவும் கஷ்டப்படும். குறைந்தது ஒரு வாரத்துக்காவது ஒரே மாதிரி Shift இல் இருந்தால் தான் உடம்பு அதற்கு ஈடுகொடுத்து மாற்றிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். ஆக நேரத்தை கூட நமது உடம்புக்கு சௌகரியமான முறையில் உபயோகப்படுத்துவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு "Chrono hygiene" என்றே பெயர் வைத்திருக்கிறார்கள்!

Shift இல் வேலை செய்பவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி விஞ்ஞானிகள் கொடுக்கும் சில குறிப்புகளை சொல்கிறேன். காதில் போட்டு வைத்துக்கொள்ளுங்கள்! உடம்புக்கு தேவைப்படும் அளவுக்கு தூங்கவேண்டும். சத்துள்ள ஆகாரம் சாப்பிடவேண்டும். தவறாமல் உடற்பயிற்சி செய்யவேண்டும். இரவில் கொழுப்பு சத்துள்ள உணவு சாப்பிடக்கூடாது. ஏன் என்றால் அந்த நேரம் ஜீரண சக்தி குறைவாக இருக்கும்.

இந்த Chrono-hygiene என்பது முக்கியமாக வாகன ஓட்டுநர்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று! எவ்வளவோ விபத்துக்களை இது மூலமாக தடுத்துவிட முடியும். விடியற்காலை நேரத்தில் ஒரு பேருந்து வேகமாக போய்க்கொண்டிருந்தது. அந்த பேருந்தில் தெய்வீக பிரசாரம் செய்யும் ஒரு பெரியவரும் போய்க்கொண்டிருந்தார். திடீர் என்று அந்த பேருந்து ஒரு ஆற்றில் விழுந்துவிட்டது.

அந்த பேருந்தை ஓடியவர் சொர்க்கத்துக்குப் போய்விட்டார், பெரியவர் நரகத்துக்குப் போய்விட்டார். இது ஏன் இப்படி என்று யாருக்கும் புரியவில்லை... அந்தப் பெரியவரே பொறுக்க முடியாமல் கடவுளிடம் முறையிட்டார். "கடவுளே! இது என்ன அநியாயம்! நான் காலம் பூராகவும் ஜனங்களுக்கு தெய்வீக பிரசாரம் செய்துகொண்டிருந்தேன். என்னாலே தான் பல பேர் உங்களை நினைக்கிறார்கள். அப்படி இருக்குப்போது என்னை நரகத்துக்கு அனுப்பிவிட்டீர்கள். அந்த ஆள் தண்ணி போட்டுவிட்டு கண் முழித்து வண்டியை ஓட்டி கவுத்துவிட்டார்... அவரை சொர்க்கத்துக்கு அனுப்பிவிட்டீர்களே!" என்று கேட்டார்.

அதற்கு கடவுள் பதில் சொன்னார். "அப்படி இல்லல... நீ பிரசங்கம் செய்யும் போதெல்லாம் ஜனங்கள் கவலையே இல்லாமல் கண்ணை மூடி தூங்கிக்கொண்டிருப்பார்கள்!

ஆனால் அந்த ஆள் வண்டி ஓட்டும்போது எல்லாம் அதில் பிரயாணம் செய்பவர்கள் அத்தனை பேரும் என்னையே பிரார்த்தனை செய்துகொண்டிருப்பார்கள்! நல்விதமாக போய்ச் சேரவேண்டுமே என்பதற்காக! உன்னைவிட அவர் தான் ஜனங்களுக்கு அடிக்கடி என் ஞாபகத்தை உண்டாக்கின்றார். அதனால்தான் இப்படி செய்தேன்!" என்றார் கடவுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து விமான நிலையங்களுக்குப் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கையில் நேற்று பல்வேறு இடங்களில் இடம்பெற்ற ஆறு பயங்கரக் குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து, கட்டுநாயக்க, பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




அதன்படி நேற்று முற்பகல் 10 மணிமுதல் பண்டாரநாயக்க விமான நிலையத்தினுடைய பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைவாக விமான பயணிகள் தவிர ஏனையோர் விமான நிலைய வளாகத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விமானப் பயணங்களை மேற்கொள்கின்ற பயணிகளை உரிய காலத்திற்கு முன்னர் விமான நிலையத்திற்கு வருகை தருமாறும் விமான நிலைய அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-7)

## போலி நாணயத்தாள்களுடன் கொத்மலையில் ஒருவர் கைது

(கொத்மலை)

கொத்மலைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின்படி நேற்றுக் காலை நடவடிக்கையின் போது 5000 ரூபா போலி நாணயத்தாள்கள் 44 மற்றும் 1000 ரூபா போலி நாணயத்தாள்கள் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் உடஹேன் தென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடையவர் எனவும் தெரிய வருகிறது.

சந்தேக நபரை ஹெல்பொட நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் கொத்மலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன் எடுத்துள்ளனர். (இ-7)

## குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்காக இரத்ததானம் வழங்கக் கோரிக்கை

(ஏறாவூர்)

மட்டக்களப்பு நகரில் புனித மைக்கல் கல்லூரிக்கு அருகிலுள்ள சியோன் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பலர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் அதில் பெரும்பாலானோருக்கு இரத்தம் வழங்க வேண்டிய தேவை உள்ள போதும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தம் இல்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் இரத்த தானம் வழங்கக்கூடியவர்கள் உடனடியாக வைத்தியசாலையை அணுகி இரத்தம் வழங்குமாறு கோரியுள்ளனர்.

அத்துடன் கொழும்பு, நீர்கொழும்பு போன்ற பகுதிகளிலும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற நிலையில் அதில் பாதிக்கப்பட்டவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளிலும், இரத்ததானம் வழங்குமாறு மக்களிடம் கோரப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கையின் நிலைமைகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது



### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா தெரிவிப்பு

(டில்லி)


இலங்கையில் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்தியா தெரிவித்துள்ளது. இலங்கையில் நேற்றுக் காலை அடுத்தடுத்து நிகழ்ந்த குண்டுவெடிப்புகளை அடுத்து, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

"கொழும்பிலும் மட்டக்களப்பிலும் பல்வேறு இடங்களில் குண்டுகள் வெடித்துள்ளன. இலங்கையின் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறது." என்று அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் நிகழ்ந்த குண்டுவெடிப்புக்களையடுத்து தாம் கொழும்பிலுள்ள இந்திய தூதுவருடன் தொடர்பில் இருப்பதாகவும்நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் டுவிட்டர் பதிவு ஒன்றை இட்டுள்ளார். (இ-7)

## நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு
### தாக்குதலுக்கு கடும் கண்டனம்



(கொழும்பு)

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களை வன்மையாகக் கண்டிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது டுவிட்டர் வலைத்தளத்தில் இவ்வாறு கண்டனத்தைப் பதிவிட்டுள்ளார்.

மேலும் இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாட்டு மக்கள் அமைதியுடனும், பொறுமையுடனும் செயற்படுமாறும், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள், செய்திகளை பொதுமக்கள் தவிர்க்குமாறும் பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

## இலங்கையிலுள்ள பிரித்தானியா உள்ளிட்ட வெளிநாட்டு பிரஜைகளுக்கு அவசர அறிவிப்பு

சுற்றுலாவுக்காக இலங்கைக்கு வந்துள்ள பிரித்தானிய மற்றும் இந்திய பிரஜைகளுக்கு பிரித்தானிய மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயங்கள் அவசர அறிவிப்பை விடுத்துள்ளன.

இதன்படி இலங்கையில் தங்கியிருக்கும் பிரித்தானிய மற்றும் இந்திய பிரஜைகளை அவதானமாகவும், பாதுகாப்பாகவும் இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைப் பாதுகாப்பு படைகளின் அறிவுறுத்தலின் படி செயற்படுமாறு அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நேற்றுக் காலை நட்சத்திர விடுதிகள் உள்ளிட்ட ஆறு இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந் நிலையில் பிரித்தானிய மற்றும் இந்தியப் பிரஜைகளுக்கான இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 105 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 120 | 110 | 160 |
| தக்காளி | 80 | 80 | 100 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 | 100 |
| கோவா | 80 | 60 | 60 | 60 | 80 |
| கரட் | 120 | 100 | 100 | 80 | 160 |
| பூசணி | 50 | 50 | 20 | 30 | 40 |
| புடோல் | 80 | 100 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 90 | 70 | 100 |
| பாகற்காய் | 150 | 160 | 140 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | — | 45 | 100 |
| பயற்றங்காய் | 200 | 160 | 120 | 90 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 80 | 160 |
| பீற்றூட் | 100 | 80 | — | 40 | 120 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 150 | 160 | 150 | 200 | 200 |
| போஞ்சி | 200 | 200 | — | 210 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | — | 30 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 25 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 400 | 200 | 300 | 270 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 45 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 160 | 150 | 140 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | — | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் படிமுறைமைகளும் பகுதி-II

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

07



**விவசாயப் பிணக்குகளைத் தீர்த்தல். (கமநல நியாயச் சபை)**

சொந்தக் காணிப் பயிர்ச் செய்கை யாளர்களினால் வாரப்பயிர்ச் செய்கை யாளர்களை நீக்குதல், வாரப்பயிர்ச் செய்கையாளர்களினால் சொந்தக்கா ணிக்காரர்களுக்கு குத்தகையை செலுத் தாது உதாசீனம் செய்தல் உட்பட கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் உள்ள 10 பிரிவுகள் மட்டில் கமநல நியாயச் சபை மூலம் விசாரணைகள் நடத்துதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள் ளதுடன், 2011 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய (திருத்த) கமநல அபி விருத்திச் சட்டத்திற்கமைய கமநல நியாயச் சபையின் தீர்மானத்திற்கு எதிராக மனுக்களை சமர்ப்பிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆய்வு சபையை செயற்படுத்துவதன் பொருட்டுத் தேவை யான ஒழுங்கு விதிகள் வர்த்தமா னியில் வெளியிடப்பட்டுள்ளது.

**கமத்தொழில் காணி இடாப்புத் தொடர்பான செயற்பாடுகள்**

கமநல அபிவிருத்திச் சட்டத்தை செயற்படுத்தும் போது மேற்படி சட்டத் தின் 53 ஆவது பிரிவிற்கமைய கமத் தொழில் காணி இடாப்புத் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை செயற் படுத்தல் மற்றும் அந்நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் முக்கியமான விடயமாகும். நாட்டிலுள்ள சகல கமநல சேவைகள் நிலையங்களிலுமுள்ள கமத்தொழில் காணி இடாப்புக்கள் (மேட்டு / சேற்று) பொது மக்களின் பரிசீலனைக்காக ஒவ்வொரு வருடத்தி லும் இரு தடவைகள் அதாவது ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் திறந்து வைப்பதாக பத்திரிகை வாயிலாக அறி விக்கப்படுகின்றது. அவ்வாறு திறந்து வைத்து அது தொடர்பாக கிடைக்கப் பெறும் வேண்டுகோள்களை பரிசீ லனை செய்து பார்த்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கிறது.

**நீர் முகாமைத்துவம்**

2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க முடைய கமநல அபிவிருத்திச் சட்டத் தின் 7வது பாகத்தின் "சிறிய நீர்ப்பாசன வேலையும் நீர்ப்பாசன நீரின் முகா மைத்துவம்" என்னும் தலைப்பில் கமநல அபிவிருத்தித் திணைக்களத் திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு இலங்கையி லுள்ள சகல சிறிய (கிராமிய) நீர்ப் பாச னங்களினதும் பயன்பாட்டினை மேலோ ங்கச் செய்தல் மற்றும் அவற்றை முறை யாக முகாமைத்துவம் செய்வதன் ஊடாக அதனது பாதுகாப்பினை உறுதி செய் வதற்குத் தேவையான வேலைத் திட்டங் களை தயாரித்து செயற்படுத்தல் போன் றவை இச் சபை யின் பணிகளாகும்.

**17. நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம் (Irrigation Ordinance)**

நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம் நீர்ப் பாசன மற்றும் தாது நிலங்களின் ஒழு ங்கு முறை மற்றும் முகாமைத்துவம் பற்றி விபரிக்கின்றது.

**நீர்ப்பாசன திணைக்களத்தின் வரலாறு**

நீர்ப்பாசனம் மற்றும் வயல் காணி களை பயிர் செய்வது தொடர்பிலான பழைமைவாய்ந்த பாரம்பரியங்களுக்கு மீண்டும் உயிரூட்டுவதற்காகவும் வலு வுள்ளதாக்குவதற்கும் 1856 இற்கு முன் னர் இருந்த கட்டளைச் சட்டத்தின் ஏற்பா டுகளையும் மீள உள்ளடக்கிய புதிய நீர்ப்பாசன கட்டளைச் சட்டமான 1867 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது.

1887ஆம் ஆண்டில் ஆளுநரின் தலைமையில் மாகாணங்களுக்கு சேவை களை வழங்குவதற்காக மாகாண நீர்ப் பாசன சபைகளுடன் மத்திய நீர்ப்பாசன சபைகளை உருவாக்கி கட்டளைச் சட்டத் தில் அங்கீகரிக்கப்பட்டது. இந்த மாகாண சபைகள் அரசாங்க அதிபர்களின் தலை மையின் கீழ் இருந்தன. அத்துடன் ஒவ் வொரு மாகாணத்தின் மாகாண பொறி யியலாளரினதும் பிரதான நில அளவை யாளரினதும் அங்கத்துவத்தை அச்சபை கள் கொண்டிருந்தன.

1900ஆம் ஆண்டில் இலங்கையில் பயிரிடப்பட்ட மொத்த நிலத்தின் அளவு 670,000 ஏக்கராகும். அத்துடன் நீர்ப்பாசன நீர் வழங்கலின் கீழ் பயிரிடப்பட்ட 220,000 ஏக்கரையும் மழை நீரால் போசிக்கப்பட்ட 450,000 ஏக்கரையும் கொண்டதாக இந்த நிலத்தின் அளவு இருந்தது. அரிசி உற் பத்தி ஆண்டொ ன்றுக்கு 18.6 மில்லியன் புசலாக இருந்தது.

1900 மே மாதம் 15ஆம் திகதி நீர்ப்பா சன நடவடிக்கைகளுக்காக தனியான திணைக்களமொன்று அமைக்கப்பட்டது. திணைக்களத்தின் தலைமை அலு வலகம் திருகோணமலையில் அமைந்தி ருந்தது. அதன் காரணமாக நீர்ப்பாசன அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் பெரும்பாலும் வடக்கு, வட மத்திய மற் றும் கிழக்கு மாகாணங்களுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டன.

1930 ஆம் ஆண்டு நீர்ப்பாசன திணை க்களத்தின் தலைமையகம் திருகோண மலையிலிருந்து புறக்கோட்டை நகர மண்டபத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அதன் பின்னர் 1931 நவம்பர் மாதத்தில் அது கொழும்பு கோட்டை செயலக கட்ட டத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

**நீர்ப்பாசன கட்டளைச் சட்டம் - 1946இன் இல.32**

> 1946ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டம் 1946ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி நடைமுறைக்கு வந்தது. இச் சட்டம் 1951, 1968, 1973, 1983, 1990, 1993 ஆகிய வருடங்களில் திருத்தம் செய்யப்பட்டது. நீர்ப்பாசனம் சம்பந்தமான அரச காணி ஒதுக்கீடுகள் அரச காணிச் சட்டத்திலேயே குறிப்பிடப் பட்டுள்ளன.

1946இற்கு முன்னர் இருந்த கட்ட ளைச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் மீள உள் ளடக்கிய புதிய நீர்ப்பாசன கட்டளைச் சட்டமான 1946ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டம் 1946 ஆம் ஆண்டு நவம் பர் முதலாம் திகதி நடைமுறைக்கு வந்தது. இச் சட்டம் 1951, 1968, 1973, 1983, 1990, 1993 ஆகிய வருடங்களில் திருத்தம் செய்யப்பட்டது.

**நதிகள், கால்வாய்கள், நீரோடை களுக்காக ஒதுக்கப்பட்ட காணிகள்**

நீர்ப்பாசனம் சம்பந்தமான காணி ஒதுக்கீடுகள் அரச காணிச் சட்டத்தி லேயே குறிப்பிடப்பட்டுள்ளன. நதிகள், கால்வாய்கள், நீரோடைகள் ஆகியவ ற்றிற்கு அருகேயுள்ள அரச காணிகள் கீழ் குறிப்பிட்டுள்ளபடி காணியின் அளவு ஒதுக்கங்களாக கருதப்படும். 1948.10.15 ஆம் திகதிய 9912ஆம் இலக்கத்தைக் கொண்ட அரச காணிகள் 11ஆம் ஒழுங்கு விதிக்கேற்ப அத்தகைய ஒதுக்கங்கள் பின்வருமாறு அமையும்.

(அ) சிறுநதிகள், கால்வாய்கள், நீரோ டைகள் 15 அடிக்குக் குறைவான அகல முள்ள சிறுநதிகள்,கால்வாய்கள் நீரோ டைகளின் ஒவ்வொரு கரையிலும் ஒரு சங்கிலி (66 அடி) அளவிலான காணிக் கீறுகள் குறித்தொதுக்கப்படல் வேண்டும்.

(ஆ) மத்திய தரத்திலான நதிகள், கால்வாய்கள், நீரோடைகள் 15-50 அடி அகலமுள்ள நதிகள், கால்வாய்கள் நீரோடைகளின் இருமருங்கும் ஒவ் வொரு கரையிலும் இரண்டு சங்கிலி (132 அடி) அளவிலான காணிக்கீறுகள் குறித்தொதுக்கப்படல் வேண்டும்.

(இ) பிரதான நிதிகள் 50 அடிக்கு மேல் அகலமுள்ள நதிகளின் ஒவ்வொரு கரையிலும் மூன்று சங்கிலி (178 அடி) அளவிலான காணிக் கீறுகள் குறித் தொதுக்கப்படல்வேண்டும் (land manual)

**நீர்ப்பாசனத்திற்கான ஒதுக்காங் கள். (land manual )**

(1)(அ)நீர்ப்பாசனத்திற்கான ஒதுக்க ங்கள்

(1)10 அடி அல்லது அதற்கு மேல் அகலமான அடித்தளத்தைக் கொண்டு அமைந்த நீர்ப்பாசனக் கால்வாய்களுக் கும் நீர்வழிகளுக்கும் 49.5 அடி

(2) 5-10 அடி அகலமான அடித்தள த்தைக் கொண்ட நீர்ப்பாசனக் கால்வாய் களையும் நீர்வழிகளும் 26.4 அடி

(3) 5 அடிக்குக் குறைவான அகல முள்ள அடித்தளத்தைக் கொண்ட நீர்வழி களில் 9.9 அடி.

இக் காணிக் கீறானது இரு பக்கங்க ளிலும் குறித்தொதுக்கப்படல் வேண்டும் என்பதுடன் அளத்தலானது மண்ணி னால் ஆன பகுதியின் வெளிப்புற எல் லைகளிலிருந்து செய்யப்படல் வேண்டும் (உதாரணம்: கரையின் விளிம்பின் எல் லையிலிருந்து அல்லது வெட்டு முகத் தில் இருந்து) நீர்வழியின் இருபக்க நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதி அளிக்க ப்பட்டிருந்தால் இரு பக்கங்களின் ஏதே னும் ஒரு பக்கத்தில் குறித்தொதுக்கப்படும் காணிக்கீறானது மேற்கூறப்பட்ட அள வுகளின் அரைவாசியாகலாம்.

(ஆ) குளக்கட்டு ஒதுக்கப்படும் நிலத் தின் அகலமானது அத்தகைய அகலம் அளக்கப்படுகின்ற இடத்தின் எதிரே கட்டின் உயரத்தைப் போன்று பதினை ந்து மடங்காகுதல் வேண்டும். இவ்வாறு ஒதுக்கப்படும் காணிக்கீறானது கட்டின் உச்சியின் மத்திய கோட்டிலிருந்து அளக்கப்படுதல் வேண்டும்.

(2) கால்வாய்கள், நீரோடைகள், நதிகள் எல்லாவற்றினதும் நீரேந்து பரப்பானது ஒதுக்கப்பட்ட காணிப் பிரதேச மாக குறித்தொதுக்கப்பட்டு வைத்திரு க்கப்படுதல் வேண்டும்.

(3)நதிகள், கால்வாய்கள், நீரோடை களுக்கான ஒதுக்கப்பட்ட காணிகள் எந்தவித காரணத்துக்காகவும் குத்தகை கொடுக்கப்படல் ஆகாது. அத்தகைய ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் அத்துமீறிக் கைப்பற்றப்பட்டிருந்தால் அத்தகைய அத்துமீறிய கைப்பற்றுகையானது மண் அரிப்புக்குக் காரணமாக அமையாத விடத்தும் அத்துமீறி அக் காணியை கைப்பற்றியுள்ள நபரை வெளியேற் றுதல் நடைமுறையில் சாத்தியமற்றது என அரசாங்க அதிபர் / பிரதேச செய லாளர் திருப்திப்படுவாரெனில் மாத்திரம் அத்துமீறிக் கைப்பற்றப்பட்டுள்ள அக் காணித்துண்டின் விளைச்சலைப் பெறும் உரிமையை அனுமதிப்பத்திரம் ஒன் றின் மீது குத்தகை கொடுக்கலாம். ஒரு தடவைக்கு ஒரு வருடத்தை விஞ்சாத காலத்துக்கு அத்தகைய அனுமதிப்பத்தி ரங்கள் வழங்கப்படுதல் வேண்டும். மேலும் அரசாங்க அதிபரினால் விதிக் கப்படுகின்ற மண்பாதுகாப்பு நடவடிக் கைகள் அனுமதிப்பத்திர சொந்தக்கா ரரால் மேற்கொள்ளப்படல்வேண்டும்என்ற நிபந்தனை ஒன்றும் அனுமதிப்பத்திரத் தில் உள்ளடக்கப்படல் வேண்டும். அத் தகைய அனுமதிப்பத்திரங்களுக்கு காணி யின் விருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 6வீதம் மாதத்திற்கு கணிக்கப்பட்ட ஆண் டுக் குத்தகையொன்றை அறவிடப்படல் வேண்டும்.

(4)நதிகள், கால்வாய்கள், நீரோடை களுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் எவரேனும் குடியேறுவதை இயன்ற ளவு தடுத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றில் காடு வளர்வதற்கு இடமளிக் கப்படல் வேண்டும்.

(5) மேலே (2) இன் கீழ் குறிப்பிட ப்படும் கால்வாய்கள், நீரோடைகள் நதிகளுக்கான ஒதுக்கங்கள் அரசுக்குச் சொந்தமான காணிகளில் அவ்வாறு ஒதுக்கப்படலாம். பொதுவாக தனியார் காணிகளில் அத்தகைய ஒதுக்கப்பட்ட காணிகளை ஒதுக்கி வைப்பதற்கு சட்ட த்தின் கீழ்வசதி இல்லை. தனியார் காணிச் சொந்தக்காரருக்கு நதிக்கரையின் விளிம்பு வரையில் உரிமையுண்டு. நதிக்கரைகளும் நதியின் அடித்தளமும் அரச உடைமைகளாகும். ஏதேனும் விதத் தில் தனியார் காணிச் சொந்தக்காரர் ஒருவர் நதிக்கரை வரையில் மண் அரி பட்டுச் செல்லக்கூடிய வகையில் மண் வெட்டுதல், பயிர்செய்தல் அல்லது வேறு எதையேனும் செய்யுமிடத்து மண்வள பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கமத்தொழில் பணிப்பாளரின் அறிவுரையின் மீது அரசாங்க அதிபர்களால்/ பிரதேச செய லாளரால் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

227

ஆயினும் முனைப்பாளர் உள்ளூர் சபை நிறுவப்படல் வேண்டுமென அரசாங்கத்தைத் தொடர்ந்தும் உரிமையுடன் கோரினர். அவர்களுடைய கோரிக்கையைத் தெளிவாகவும் நியாயப்படுத்தியும் யாழ்ப்பாணத்திற்கு ஒரு உள்ளூர் சபை தேவை என்ற தலைப்பின் கீழ் இந்து ஒகன் பத்திராதிபர் தலையங்கம் வெளியிட்டது.

சுகாதாரத்தின் நலனை மட்டுமல்லாது சுய ஆட்சியின் பால் அக்கறை கொண்டு நாம் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி சபையை நிறுவவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி இப் பத்திகளில் இவ்விடயத்தைப் பற்றி அடிக்கடி பிரஸ்தாபித்துள்ளோம்.

ஆனால் எமது அரசாங்க அதிபர் தந்தை அரசின் மகாராணியின் உள்ளூர் இலங்கைக் குடிமக்களின் நிலைமையைச் சீர்திருத்தம் செய்வதற்குத் தேவையான எல்லா நிறுவனங்களினதும் அறிமுகப்படுத்தலை எதிர்த்து எமது குரலை வனாந்தரத்தில் ஒலித்த குரலாக்கி விட்டார்.

குடியேற்ற நாட்டின் ஏனைய மாகாணங்களில் எல்லா கிராம சபைகளும் கிராம நியாய சபைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் மூன்று நகரங்கள் சனத்தொகை ரீதியில் யாழ்ப்பாண நகரத்தின் முக்கியத்துவத்தை இவற்றில் பெற்றிராத இரண்டு நகரங்கள் உட்பட மாநகர சபைகளைப் பெற்றுள்ளன.

மேலும் மட்டக்களப்பு, கம்பளை, சிலாபம் போன்ற இரண்டாம் மூன்றாம் தர நகரங்கள் உள்ளூராட்சி சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இயங்குகையில் வடமாகாணம் மாத்திரமே இலங்கையில் மட்டுமன்றி பிரித்தானியச் சாம்ராச்சியத்திலேயே மாநகர சபை அல்லது உள்ளூராட்சி சபை என்ற சுயாட்சி நலனை அனுபவிக்காத ஒரேயொரு நகரமாக உள்ளது.

தமிழ் அரசியல் ஆவல்களும் அபிலாசைகளும் சுய நிர்ணயத்தை நோக்கி இறுக்கம் பெற்றது இதனால் தெளிவாகின்றது. இந்த வகையான அரசியல் உணர்வும் திடசித்தமுமே தமிழரை, தமிழ்த் தேசிய வாதத்தையிட்டு கருத்துக்களைக் கைக்கொள்வதற்கு மேலும் தூண்டின எனலாம்.



உள்ளூராட்சி சபை

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

யாழ்ப்பாணத்தில் 1901 பங்குனி 2 ஆம் திகதி மாவட்ட நீதி மன்ற இல்லத்தில் கூட்டப்பட்ட கூட்டம் அப்போது நிலவிய மனோநிலையை தெளிவாகச் சித்திரிக்கின்றது.

ஏறத்தாழ இரண்டாயிரம் மக்கள் பங்குபற்றிய இந்தக் கூட்டத்தில் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் தமக்கென உள்ளூராட்சி சபை வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பதில் ஒரு முகமான ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

செய்திப் பத்திரிகைகளான இந்து ஒகன், த பேற்றியற், மோணிங் ஸ்ரார் என்பனவற்றுடன் கொழும்புப் பத்திரிகைகளான தி இன்டிபெண்டன்ற், தி ஒப்சேவர் என்பனவும் யாழ்ப்பாண பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் பொது நிர்வாகச் சீர்திருத்தத்திற்கும் உள்ளூராட்சி சபையொன்று அத்தியாவசியம் எனத் தீர்மானித்திருந்தன.

மேலும் கல்விபெற்ற தமிழ் உயர்மட்ட அங்கத்தவராகிய குறிப்பாக நீதிபதி ரி. செல்லப்பாப்பிள்ளை, வழக்கறிஞர் எஸ். கனகசபை, இந்துக் கல்லூரி அதிபர் ரி. செல்லத்துரை, பிரக்கிராசி ரி. காசிப்பிள்ளை ஆகியோரும் வேறுபலரும் யாழ்ப்பாணத்திற்கு ஓர் உள்ளூராட்சி சபையின் அத்தியாவசியத்தை வலியுறுத்தியும் அதற்கு ஆதரவாக எழுதியும் பேச்சுக்கள் நிகழ்த்தியும் தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

ஈற்றில் தொடர்ந்தும் அதிகரித்துக்கொண்டே சென்ற கோரிக்கைக்குரல் காரணமாக 1906 இல் உள்ளூராட்சி சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி சபை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது.

அரசாங்க அதிபர் எம். பிஷரின் (M. Fisher) கீழ் இச் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடத்தப்பட்டு அதன் அங்கத்தவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இச்சாதனையின் முக்கியத்துவத்தை ஒரு செய்திப் பத்திரிகை வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது.

யாழ்ப்பாண நகரத்துக்கு ஒரு நகரசபையை அல்லது உள்ளூராட்சி சபையை நிறுவுவதற்கான இந்த நடவடிக்கை யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு சிறியளவில் சுயாட்சியின் சுவையை வழங்கும்.

இந்த சுயாட்சிக்கான விருப்பு சந்தேகத்திற்கு இடமின்றி தமிழரை மேலும் வெற்றிகளை ஈட்ட ஊக்குவித்து யாழ்ப்பாண இராச்சியத்தின் பாரம்பரிய பெருமையை மீளவும் நினைவில் வலியுறுத்தியிருக்கும்.

### தமிழ் அடையாளமும் அரசியல் உணர்வும்

தமிழர் மத்தியில் சமயம், கலாசாரம், மொழி என்ற ரீதியில் வளர்ந்து வரும் அடையாள உணர்வு அவர்களை விழித்தெழச் செய்து அதன் வழி பின்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்திலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அரசியல் போராட்டத்திற்கான மன நிலையை ஏற்படுத்தக் காரணமாகவிருந்தது.

சட்ட நிரூபண சபையில் அவர்கள் பங்குபற்றியதும் தமது அரசியல் உரிமைகளுக்கான குறிப்பாக சுயாட்சிக்கான அவர்களது கோரிக்கைகளும் அவர்களது அரசியல் திறன்களைக் கூர்மைப்படுத்தியது மன்றி இதைவிட அதிகமான அரசியல் வெற்றிகளை ஈட்டவும் அவர்களுக்கு ஊக்கமளித்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டு வெடித்த இடங்களுக்கு செல்வதைத் தவிருங்கள்!

## பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள்

(கொழும்பு)

குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க் குமாறு பொதுமக்களிடம் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.



வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்ற பகுதிகளில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்றுக் காலை சில இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கொழும்பு - கொச்சிக் கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். கொழும்பு சங்ரில்லா, சின்னமன் கிராண்ட் மற்றும் கிங்ஸ்பெரி ஹோட்டல்களிலும் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவங்களில் காயமடைந்தவர்களும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நீர்கொழும்பு - கட்டுவப்பிட்டிவ தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் காய மடைந்தவர்களும், நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தமிழகப் பிரபல சொற்பொழிவாளர் தா.கு.சுப்பிரமணியம் காலமானார்

(சென்னை)

தமிழகத்தின் பிரபல ஆன்மீகப் பேச்சாளரும் பட்டிமண்டபப் பேச்சாளருமாகிய முனைவர் தா.கு. சுப்பிரமணியம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 72. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர் வைணவ இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

இலங்கையில் நடைபெற்ற கம்பன் விழாக்களில் தெள்ளு தமிழில் பேசி பலரது உள்ளங்களை வென்றவர். இறுதிக் கிரியைகள் இன்று மதுரையில் இடம்பெறவுள்ளன. (இ-7)


# சேது பொறியியல் கல்லூரி

காரியாபட்டி, விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு



விளம்பர விபரணம்

தென் தமிழகத்தின் தலைசிறந்த பொறியியல் கல்லூரிகளில் ஒன் றான சேது பொறியியல் கல்லூரி, 1995ம் ஆண்டு திரு.எஸ்.முகம்மது ஜலீல், நிறுவனர் மற்றும் தலைவர் அவர்களால் சேது கல்வி தொண்டு நிறுவனத்தால் தொடங்கப்பட்டது. நிறுவனரின் மனிதநேயம் மற்றும் கண்ணியமான பண்புகளால் சமூக நல்லிணக்க விருது, சிறந்த நிர்வாகிக்கான விருது மற்றும் மாமனிதர் விருது போன்ற விருதுகளை பெற்றுள்ளார்.

மதுரை-தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் மதுரை சர்வதேச விமான நிலையத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் 132 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இக்கல்லூரி ஒரு கற்றலுக்கேற்ற சூழலை ஆர்வமுள்ள மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. 4800இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயின்று வரும் இக்கல்லூரியில் பொறியியல் துறையில் ஒன்பது இளநிலை (B.E./B.Tech.) மற்றும் ஐந்து முதுநிலை (M.E.) பாடப்பிரிவுகள் உள்ளன.

### தரச் சான்றிதழ் மற்றும் அங்கீகாரம்

சேது பொறியியல் கல்லூரி, அகில இந்திய தொழில்நுட்ப கழகத்தால் (AICTE) அங்கீகாரம் பெற்றது. அண்ணா பல்கலைக்கழகத்துடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டது. மேலும் பல்கலைக்கழக மானிய குழுவின் (UGC) தன்னாட்சி அந்தஸ்து மற்றும் தேசிய மதிப்பீடு மற்றும் தரச் சான்றிதழ் குழுவின் (NAAC) ‘A’ தரச்சான்றிதழ் பெற்றது. அனைத்து பாடப்பிரிவுகளும் தேசிய தரச்சான்றிதழ் குழுவினால் (NBA) தொடர்ந்து தரச்சான்றிதழ் பெற்று வருகிறது. கல்லூரியின் பெரும்பாலான துறைகள் அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மையங்களாக அங்கீகாரம் பெற்றவை. பல்கலைக்கழக மானிய குழு (UGC) சட்டம் 1956ன் கீழ் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது.

### விருப்பப் பாடத் தேர்வு அடிப்படையிலான கல்விமுறை

மாணவர்களுக்கு விருப்பப் பாடத் தேர்வு அடிப்படையிலான கல்விமுறையினை (Choice Based Credit System) செயற்படுத்தி சர்வதேச அளவில் புகழ்பெற்ற கல்வி பயன்பாட்டு வலைத்தளங்களான SWAYAM, NPTEL, Coursera மற்றும் edX மூலம் பாடங்களை கற்பதால் அவர்களின் அறிவுத்திறன் மென்மேலும் அதிகரிக்கிறது. தன்னாட்சி முறையிலான தொழிற் சார்ந்த கல்வி மாணவர்களின் அறிவார்ந்த திறன் மற்றும் தொழில்சார் அனுபவத்தை வளர்த்து அவர்களை பன்னாட்டு நிறுவனங்களின் பணிக்கு ஏற்ப தயார்படுத்த உதவுகிறது.

### வேலைவாய்ப்பு மற்றும் கல்வி ஊக்கத்தொகை

அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களை கொண்ட வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினரால் ஒவ்வொரு வருடமும் 95 விழுக்காட்டிற்கும் மேல் மாணவர்கள் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களில் இறுதியாண்டு பயிலும் பொழுதே வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர். சர்வதேச Toastmasters நிறுவனம் மூலம் சிறப்பு ஆங்கில மொழி பயிற்சி, பிரஞ்சு, ஜப்பான் மற்றும் ஜெர்மன் போன்ற பன்னாட்டு மொழிகளின் பயிற்சி மூலம் மாணவர்கள் சர்வதேச நிறுவனங்களில் பணிபுரிய தயார்படுத்தப்படுகின்றனர். சேது பொறியியல் கல்லூரி இலங்கை மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 40 விழுக்காடு சிறப்பு கல்வி ஊக்கத்தொகையினை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1700

### கஜன்

நினைவில் பல உறவுகள் இருந்தாலும் நினைக்க வைக்கும் உறவுக்குத்தான் பாசம் அதிகம்



### உசாந்தினி

எல்லோரும் தனக்கு ஓர் இதயம் இருக்கிறது என்பதை உணர்வதே யாரோ ஒருவரின் அன்பை ரசிக்க ஆரம்பிக்கும் பொழுதுதான்




### மாதவன்

பிழைக்கத் தெரியாதவனாய் இந்த தேசத்தில் உயிர் போகும் வரை உழைப்பது ஏழைக்கூட்டங்களே



### விஷ்ணு

யோசித்துப்பார் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை வரமெனப் புரியும்



### இளவரசி

மரம் வெட்டும் கோடரிகளை மறந்து விடுவோம் செடி நடும் மண்வெட்டிகளை கையில் எடுப்போம்



### சுதா

பிரபலமாக இருக்க ஆசைப்படுவதைவிட பிறருக்கு பலமாக இருக்க ஆசைப்படு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண க.பொ.த. (சா/த) பரீட்சை அடைவு மட்டம் 2015 இல் இருந்து வளர்ச்சிப் போக்கில்


பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

அட்டவணை IV இல் மாவட்ட அடிப்படையில் 2017, 2018 க:பொ.த (சா/த) பரீட்சை அடைவுகள் கீழிறங்கு நிலையில் தரப்பட்டுள்ளன.

2017, 2018 ஆம் ஆண்டு பரீட்சை அடைவு மட்டங்களைநோக்கின் மாவட்ட நிலை மாற்றங்களைக் காணலாம். கேகாலை, மொனராகலை, கிளிநொச்சி மாவட்டங்களின் வகுதி நிலைகளில் மாற்றமில்லை. ஏனைய 22 மாவட்டங்களின் வகுதி நிலைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

2017 இல் 12 ஆம் நிலையைப் பெற்றுள்ள மன்னார் 2018 இல் 9 ஆவது இடத்தையும் 2017 இல் 18 ஆம் நிலையைப் பெற்றிருந்த வவுனியா 2018 இல் 15ஆம் நிலையையும் 2017 இல் 24 ஆம் இடத்தைப் பெற்ற முல்லைத்தீவு 2018 இல் 23 ஆம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 9 பாடங்களிலும் சித்தி பெறத் தவறிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2017 இல் 7308 பரீட்சார்த்திகள் எல்லாப் பாடங்களிலும் சித்தியடையாதிருந்தனர்.

அதாவது மொத்த பரீட்சார்த்திகளில் 4.6 வீதமாகும். 2018 இல் எல்லாப் பாடங்களிலும் சித்தியடையாதவர்கள் எண்ணிக்கை 5917 ஆகவும் மொத்தப் பரீட்சை எழுதியவர்களில் 2 வீதமாகவும் இருந்தது.

9 பாடங்களிலும் சித்திபெறத் தவறிய மாவட்டங்களில் கிளிநொச்சி 3.89 வீதமாகவும் முல்லைத்தீவு 3.16 ஆகவும் யாழ்ப்பாணம் 8.23 வீதமாகவும் வவுனியா 1.38 வீத மாகவும் மன்னார் மாவட்டமே இலங்கையில் மிகக் குறைந்த நிலையில் முதலிடத்தைப் பெருமை கிடைத்தது.

அதாவது மன்னாரையும் வவுனியாவையும் தவிர ஏனைய 3 மாவட்டங்களும் தேசிய சராசரியிலும் உயர்வாக இருப்பதுடன் ஆகக் கூடிய சித்தியின்மை கிளிநொச்சியையே காட்டி நிற்கின்றது.

2017 இல் எல்லாப் பாடங்களிலும் சித்திபெறத் தவறிய மாவட்டங்களின் விகிதாசாரம் கிளிநொச்சி 5.11, முல்லைத்தீவு 4.66, யாழ்ப்பாணம் 3.69, வவு னியா 1.74, மன்னார் 1.48 2017 ஆம் ஆண்டில் மன்னார், வவுனியா மாவட்டங்கள் தேசிய சராசரியிலும் குறைவாகவும் ஏனைய மூன்று வடமாகாண மாவட்டங்கள் தேசிய சராசரியிலும் உயர்வான சித்தியின்மையைப் பெற்றுள்ளன.

9 பாடங்களில் சித்தியடையாத பரீட்சைப் பெறுபேறுகளில் 2017, 2018 பெறுபேறுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது 2018 இல் எல்லா மாவட்டங்களும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

எல்லா நிலைகளிலும் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களும் 2017 ஆம் ஆண்டு இருந்த நிலையிலும் பார்க்க 2018 ஆம் ஆண்டில் முன்னேற்றம் கண்டுள்ளதை அட்டவணைகளின் தரவுகள் காட்டி நிற்கின்றன.

(தொடரும்)

அட்டவணை III

| | மாகாணம் | 2015 5 அல்லது அதற்கு மேல் எடுத்த பாடங்கள் | 2015 க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி எண். | 2015 வீதம் | 2016 5 அல்லது அதற்கு மேல் எடுத்த பாடங்கள் | 2016 க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி எண் | 2016 வீதம் | 2017 5 அல்லது அதற்கு மேல் எடுத்த பாடங்கள் | 2017 க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி எண் | 2017 வீதம் | 2018 5 அல்லது அதற்கு மேல் எடுத்த பாடங்கள் | 2018 க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி எண் | 2018 வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | மேற்கு | 73,017 | 53,062 | 72.67 | 75,414 | 54,994 | 72.92 | 78,708 | 58,704 | 74.58 | 78,071 | 59,858 | 76.67 |
| 02 | மத்தி | 34,652 | 23,209 | 66.98 | 37,665 | 25,932 | 68.85 | 38,977 | 27,838 | 71.42 | 39,625 | 28,680 | 72.38 |
| 03 | தெற்கு | 34,801 | 26,173 | 75.21 | 34,994 | 26,828 | 76.66 | 36,225 | 28,768 | 79.41 | 36,720 | 29,532 | 80.02 |
| 04 | வடக்கு | 17,752 | 10,719 | 60.38 | 17,413 | 10,562 | 60.66 | 17,999 | 11,901 | 66.12 | 16,659 | 11,660 | 69.99 |
| 05 | கிழக்கு | 21,693 | 13,784 | 63.54 | 23,744 | 14,617 | 61.56 | 24,280 | 16,452 | 67.06 | 24,022 | 16,807 | 69.97 |
| 06 | வடமேற்கு | 31,733 | 22,104 | 69.66 | 33,833 | 23,896 | 70.63 | 34,752 | 25,926 | 74.60 | 34,564 | 26,599 | 76.96 |
| 07 | வடமத்தி | 16,560 | 11,030 | 66.61 | 19,041 | 12,632 | 66.34 | 19,455 | 13,625 | 70.03 | 19,395 | 14,116 | 72.78 |
| 08 | ஊவா | 18,231 | 12,005 | 65.85 | 18,558 | 12,630 | 68.06 | 19,471 | 13,573 | 69.71 | 19,679 | 14,245 | 72.39 |
| 09 | சப்ரகமுவ | 24,785 | 17,342 | 69.97 | 25,589 | 18,117 | 70.80 | 26,945 | 20,028 | 74.33 | 27,294 | 20,784 | 76.15 |
| | தீவு முழுவதும் | 273,224 | 189,428 | 63.33 | 286,251 | 200,208 | 69.94 | 296,812 | 216,815 | 73.05 | 296,029 | 222,281 | 75.09 |

ஆதாரம்- பரீட்சைத் திணைக்களம் அறிக்கை- 2018


| | மாவட்டம் (2017) | 5 அல்லது அதற்கு மேல் எடுத்த பாடங்கள் | க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி எண் | க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி வீதம் | சகல பாடத்திலும் சித்தி பெறாதவர்கள் எண் | சகல பாடத்திலும் சித்தி பெறாதவர்கள் வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | அம்பாந்தோட்டை | 8,913 | 7,136 | 80.06 | 112 | 1.26 |
| 02 | மாத்தறை | 11,772 | 9,421 | 80.03 | 136 | 1.16 |
| 03 | காலி | 15,540 | 12,211 | 78.53 | 199 | 1.28 |
| 04 | கொழும்பு | 33,231 | 26,018 | 78.29 | 693 | 2.09 |
| 05 | குருநாகல் | 24,146 | 18,538 | 76.77 | 419 | 1.74 |
| 06 | கேகாலை | 12,083 | 9,113 | 75.42 | 309 | 2.56 |
| 07 | கண்டி | 20,986 | 15,520 | 73.95 | 500 | 2.38 |
| 08 | இரத்தினபுரி | 14,862 | 10,915 | 73.44 | 418 | 2.81 |
| 09 | களுத்துறை | 16,946 | 12,264 | 72.37 | 494 | 2.92 |
| 10 | அம்பாறை | 10,160 | 7,318 | 72.03 | 228 | 2.24 |
| 11 | கம்பஹா | 28,531 | 20,422 | 71.58 | 906 | 3.18 |
| 12 | மன்னார் | 1,751 | 1,251 | 71.44 | 26 | 1.48 |
| 13 | பதுளை | 12,761 | 9,068 | 71.06 | 282 | 2.21 |
| 14 | அநுராதபுரம் | 13,435 | 9,486 | 70.61 | 453 | 3.37 |
| 15 | மாத்தளை | 7,312 | 5,154 | 70.49 | 204 | 2.79 |
| 16 | புத்தளம் | 10,606 | 7,388 | 69.99 | 205 | 1.93 |
| 17 | பொலநறுவை | 6,020 | 4,139 | 68.75 | 15 | 2.91 |
| 18 | வவுனியா | 2,704 | 1,853 | 68.53 | 47 | 1.74 |
| 19 | யாழ்ப்பாணம் | 9,176 | 6,219 | 67.77 | 339 | 3.69 |
| 20 | மொனராகலை | 6,710 | 4,505 | 67.14 | 218 | 3.25 |
| 21 | நுவரெலியா | 10,679 | 7,164 | 67.08 | 214 | 2.00 |
| 22 | மட்டக்களப்பு | 8,055 | 5,276 | 65.50 | 249 | 3.09 |
| 23 | திருகோணமலை | 6,065 | 3,858 | 63.61 | 271 | 4.47 |
| 24 | முல்லைத்தீவு | 1,884 | 1,158 | 61.46 | 84 | 4.46 |
| 25 | கிளிநொச்சி | 2,484 | 1,420 | 57.17 | 127 | 5.11 |
| | தீவு முழுவதும் | 296,812 | 216,815 | 73.05 | 7,308 | 2.46 |

| | மாவட்டம் (2018) | 5 அல்லது அதற்கு மேல் எடுத்த பாடங்கள் | க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி எண் | க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி வீதம் | சகல பாடத்திலும் சித்தி பெறாதவர்கள் எண் | சகல பாடத்திலும் சித்தி பெறாதவர்கள் வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | மாத்தறை | 12,038 | 9,871 | 82.00 | 103 | 0.86 |
| 02 | அம்பாந்தோட்டை | 9,120 | 7,387 | 81.00 | 93 | 1.02 |
| 03 | கொழும்பு | 32,686 | 26,213 | 80.20 | 609 | 1.86 |
| 04 | குருநாகல் | 23,871 | 18,873 | 79.06 | 391 | 1.64 |
| 05 | காலி | 15,562 | 12,274 | 78.87 | 213 | 1.37 |
| 06 | கேகாலை | 12,068 | 9,280 | 76.90 | 250 | 2.07 |
| 07 | இரத்தினபுரி | 15,226 | 11,504 | 75.55 | 308 | 2.02 |
| 08 | கண்டி | 21,414 | 16,127 | 75.31 | 415 | 1.94 |
| 09 | மன்னார் | 1,631 | 1,227 | 75.23 | 08 | 0.49 |
| 10 | களுத்துறை | 17,010 | 12,650 | 74.37 | 340 | 2.00 |
| 11 | அம்பாறை | 10,021 | 7,437 | 74.21 | 198 | 1.98 |
| 12 | பதுளை | 12,770 | 8,462 | 74.10 | 248 | 1.94 |
| 13 | கம்பஹா | 28,375 | 20,995 | 73.99 | 646 | 2.28 |
| 14 | அநுராதபுரம் | 13,531 | 9,909 | 73.23 | 348 | 2.57 |
| 15 | வவுனியா | 2,543 | 1,853 | 72.87 | 35 | 1.38 |
| 16 | மாத்தளை | 7,253 | 5,261 | 72.54 | 173 | 2.39 |
| 17 | புத்தளம் | 10,693 | 7,726 | 72.25 | 150 | 1.40 |
| 18 | யாழ்ப்பாணம் | 8,495 | 6,096 | 71.76 | 240 | 2.83 |
| 19 | பொலநறுவை | 5,864 | 4,207 | 71.74 | 149 | 2.54 |
| 20 | மொனராகலை | 6,909 | 4,783 | 69.23 | 226 | 3.27 |
| 21 | மட்டக்களப்பு | 8,095 | 5,564 | 68.73 | 138 | 1.70 |
| 22 | நுவரெலியா | 10,958 | 7,292 | 66.54 | 306 | 2.79 |
| 23 | முல்லைத்தீவு | 1,833 | 1,182 | 64.48 | 58 | 3.16 |
| 24 | திருகோணமலை | 5,906 | 3,806 | 64.44 | 188 | 3.18 |
| 25 | கிளிநொச்சி | 2,157 | 1,302 | 60.36 | 84 | 3.89 |
| | தீவு முழுவதும் | 296,029 | 222,281 | 75.09 | 5917 | 2.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரங்கநாத சாஸ்திரி



சிறிய வயதில் பெரிய வயதினர் வேடமணிந்து... வழக்கொன்றிற்கு தீர்ப்பளித்தான் மன்னன் கரிகாலசோழன்.

அம்மன்னனைப்போன்று சிறிய வயதில்... பெரிய வயதினர் போன்று சிறைச் சாலைக்கு ஜாமீன் எடுக்கச் சென்றவர் தான் வீரவல்லி 'ரங்கநாத சாஸ்திரி...'

ஆந்திர மாநிலம் சித்தூர் அருகே களாமூரில் 1819 ஆம் ஆண்டில் பிறந்தவர் ரங்கநாதன்.

பன்னிரண்டு வயதாக இருக்கும்போது... நிலவரி கட்டாத காரணத்திற்காக அக்கால வழக்கப்படி அவரது தந்தை சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நேரத்தில் தாத்தாவுக்கு திதி நாள் வந்தது. திதியை ரங்கநாதனின் தந்தை இருந்துதான் செய்ய வேண்டும் என்ற கட்டாய நிலை.

ரங்கநாதனின் தாய்க்கோ, கணவரை எப்படி சிறையிலிருந்து வரவழைப்பது. எவ்விதம் திதியை கொடுப்பது? என்று புரியாமல் ஏங்கித் தவித்தார். தன் எண்ணத்தை வாய்விட்டு அழுதே சொன்னார்.

தாயின் அழுகைக்கான காரணத்தைப் புரிந்து கொண்ட ரங்கநாதன்

"அம்மா, அழாதீங்கம்மா... அப்பாவை எப்படியும் சிறையிலிருந்து மீட்டு வருகிறேன்" என்றார் நம்பிக்கையுடன்.

சிறுவனான நம் பையனால் எப்படி தந்தையை சிறையிலிருந்து மீட்டு வரமுடியும்? என்று தாய்க்கு நம்பிக்கையில்லை. இருப்பினும் மகனை சித்தூர் சிறைச்சாலைக்கு அனுப்பிவைத்தார்.

சித்தூரில் 'காஜா மேஜர்' என்னும் ஆங்கிலேயர் 'ஜில்லா ஜட்ஜ்' ஆக இருந்தார்.

அவரிடம் தாத்தாவுக்கு செய்ய வேண்டிய திதிக்கு தந்தை அவசியம் வரவேண்டும். அவர்தான் திதிக்கு வேண்டிய சகலமும் செய்ய வேண்டும். அதனால் தந்தையாரை வீட்டிற்கு அனுப்பி வையுங்கள் ஐயா என்று வேண்டினார்.

"தம்பி, உன் தந்தையார் திதியை முடித்த பின் மீண்டும் சிறைக்கு வருவதற்கு உத்தரவாதமாக யாராவது ஒருத்தர் ஜாமீன் வேண்டுமே" என்று கேட்டார்.

"ஐயா, இந்த ஊரில் எங்களுக்கு வேண்டியவங்க யாரும் தெரியாது. அப்படியிருக்கையில் யாரை ஜாமீனுக்கு அழைத்து வர முடியும்?

"அப்படியென்றால் எந்த ஆதாரத்தை வைத்து உன் தந்தை யாரை வீட்டிற்கு அனுப்புவது?

"ஐயா, என் தந்தை யாருக்கு ஜாமீன் கொடுக்க எனக்கு ஒரே வழிதான் தெரிகிறது.

'சொல்லு தம்பி'

"என் தந்தை திதியை முடித்து விட்டு திரும்ப சிறைக்கு வரும்வரையில் அவருக்கு பதிலாக நான் சிறையிலிருக்கிறேன். என்னை நம்புங்கள்" என்றார்.

பன்னிரண்டு வயதுப் பையனது.. எதிர்பாராத இப்பதில், 'ஜட்ஜின்' மனதை இளகச்செய்தது. ரங்கநாதன் சொன்ன வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தார். ஆனால் தந்தைக்கு பதிலாக மகனை சிறையில் வைக்க முடியாதே. ஏனெனில் ரங்கநாதன் மைனர் ஆயிற்றே... ஒரு கனம் யோசித்தார்.

எப்படியும் ரங்கநாதன் தந்தையை விடுவித்து விடுவோம் என்ற முடிவுக்கு வந்தார்.

அதற்காக மறுநாள் காலையில் தம்மை வந்து பார்க்குமாறு ரங்கநாதனிடம் கூறி அனுப்பினார்.

ரங்கநாதனும் மறுநாள் ஜட்ஜைச் சந்தித்தார்.

ரங்கநாதன் தந்தையை விடுவிக்குமாறு சிறை அதிகாரிக்கு உத்தரவு எழுதி ரங்கநாதனிடம் கொடுத்து அனுப்பினார் ஜட்ஜ்.

சிறை அதிகாரியிடம் உத்தரவினைக் காட்டி தந்தையை விடுவித்தார்.

பின்பு நள்ளிரவில் தந்தையுடன் வீடு போய்ச் சேர்ந்தார்.

நடந்த நிகழ்ச்சிகளைத் தம் கணவர் மூலம் அறிந்த ரங்கநாதனின் தாய், தம் அருமை மகனைக் கட்டியணைத்து உச்சி மோந்து ஆனந்த கண்ணீர் சொறிந்தார்.

பிற்காலத்தில் அந்த ரங்கநாதன் தான், ரங்கநாத சாஸ்திரியாக மிகப் பெரும் பதவிகளைப் பெற்று, பேரும் புகழுடன் விளங்கியவர்.

## அறிந்து கொள்வோம்

- நெருப்புக்கோழியின் கண்கள் அதன் மூளையை விடப் பெரியது!
- கோலா விலங்குகள் ஒரு நாளில் 4 மணி நேரம் மட்டுமே விழித்திருக்கின்றன.
- சில பனிச்சறுக்கு வீரர்கள் மணிக்கு 161 கிலோமீற்றர் வேகத்தில் பயணிப்பதுண்டு.
- 2004 ஆம் ஆண்டு வரை, சிங்கப்பூரில் 'சூயிங்கம்' தடை செய்யப்பட்டிருந்தது.
- பனிச்சிறுத்தைகளால் கர்ஜனை செய்யவோ, பேரொலி எழுப்பவோ முடியாது.
- பெண் தேனீக்கள் மட்டுமே கொட்டும்.
- சில வகை வண்ணத்துப்பூச்சிகளின் கண்கள் அதன் இறக்கைகளில் உள்ளன.
- நாம் பேசும்போது 72 வெவ்வேறு தசைகளைப் பயன்படுத்துகிறோம்.
- நமது உடலில் 96560 கிலோமீற்றர் நீளமுள்ள இரத்த நாளங்கள் உள்ளன.

## ஆரடித்தார் நீ அழுக கண்ணே



ஆராரோ ஆராரோ கண்ணே
நீ ஆரீரரோ ஆராரோ
ஆரடித்தார் நீ அழுக கண்ணே உனை
அடித்தவரை சொல்லி அழு
பஞ்சு மெத்தை பட்டுமெத்தை

கண்ணே உனக்குப்
பரமசிவன் கொடுத்தமெத்தை
அக்கா கொடுத்த மெத்தை கண்ணே
உனக்கு அழகான தங்கமெத்தை

மேலு வலிக்காம கண்ணே நீ
மெத்தையிலே படுத்துறங்கு
மானே மருக்கொழுந்தே கண்ணே நீ
மலர்விரிந்த மல்லியப்பூ

கரும்புசிலையானோ கண்ணே நீ
கந்தனுக்கே நாயகனோ?
சீதைக்கு அதிபதியோ கண்ணே நீ
சிங்கார ராமபிரான்தானோ?

வட்டக்கலசத்திலே கண்ணே நீ
வாய் நிரம்பப்பால் குடிச்சி
வாகான தொட்டிலிலே கண்ணே நீ
வச்சிரம்போல் தூங்கிடய்யா

(உயிரியல் வகுப்பில் ஆசிரியர் மாணவனிடம்..) "இந்தப் பறவையோட காலைப் பார்த்து இது என்ன பறவை?ன்னு சொல்லு" "தெரியலை சேர்" "இது தெரியலியா? நீயெல்லாம் உருப்படவா போற!! உன் பேரு என்னடா?" "என் காலைப் பார்த்து நீங்களே சொல்லுங்க சேர்..!!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்காதவன் முட்டாள்; சிந்திக்கத் துணியாதவன் கோழை; சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன்.
- டிரம்மண்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அப்பாவிகளைக் கொன்ற மிலேச்சத்தனம் ஒழியாதோ!

கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள தேவாலயங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இரு நூறுக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட செய்தி மனித இதயங்களைக் கருக்கி விட்டது.

புனிதமான உயிர்த்த ஞாயிறு தினத்தில் தேவாலயங்களில் வழிபாடு நடத்திக் கொண்டிருந்தவேளை மிலேச்சத்தனமாக நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் உலகம் முழுமையையும் வேதனைப்படுத்தவே செய்யும்.

தேவாலயங்கள் மீதும் கடைகள் மற்றும் பொது இடங்களிலும் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் மிகவும் நுணுக்கமாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டதென்பது தெளிவாகிறது.

எனவே குண்டுத் தாக்குதலின் பின்னணியைக் கண்டறியத் தாமதிக்கும் ஒவ்வொரு கணப்பொழுதும் பேராபத்துக்கள் நடக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதென்றே கூறவேண்டும்.

ஆகையால் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் படைத்தரப்புக்கும் விடுதலைப் புலிகள் மட்டுமே பிரச்சினை. 2009ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் புலிகள் என்ற பிரச்சினையும் படைத்தரப்பிற்கு இல்லாமல் போய் விட்டது.

எனினும் தமிழினத்தை அடக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக படைத்தரப்பின் பெரும்பகுதியை வடக்கு மாகாணத்தில் குடியிருத்தி எந்த நேரமும் தமிழ் மக்களுக்கு அச்சத்தைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்பாடுகள் நடக்கின்றன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மற்றும் மாவீரர் தினம் என்றால் தமிழர் தாயகம் எங்கும் படையினரைக் குவிக்கும் பாதுகாப்புப் பிரிவு; இன்று இந்த நாடு முழுவதையும் உலுக்கியிருக்கும் குண்டுத் தாக்குதலை முன்கூட்டியே கண்டறியாமல் - புலனாய்வுப் பிரிவு வழங்கிய எச்சரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்காமல் மௌனமாக இருந்தது ஏன்? என்ற பலத்த கேள்விகள் எழவே செய்கின்றன.

எது எவ்வாறாயினும் கொழும்பு கொச்சிக்கடை, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள மூன்று தேவாலயங்கள் உட்பட எட்டு இடங்களில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில் விரைவான விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும்.

இது விடயத்தில் வெளிநாடுகளின் உதவிகளைப் பெறுவது கூட அர்த்தமுடையதாக இருக்கும்.

அதேநேரம் நாடு முழுவதையும் அதிர வைத்துள்ள குண்டுத்தாக்குல் மூலம் அப்பாவி மக்களின் உயிரைக் காவு கொண்டவர்கள் தாங்கள் நினைத்த எதனையும் இதன்மூலம் சாதிக்கப் போவதில்லை என்பது திண்ணம்.

மாறாக பிள்ளைகளுக்குத் தாய் இல்லை, தந்தை இல்லை; தாய் தந்தையருக்குப் பிள்ளை இல்லை என்ற பேரிழப்பை ஏற்படுத்தி ஏதுமறியாத அப்பாவிகளைத் துன்பத்தில் மூழ்கடித்துள்ளமை மிகப் பெரும் கொடும் செயலாகும்

இந்த அக்கிரமமான செயல்களை நிறுத்தி, பொதுமக்களின் அமைதியான வாழ்வுக்கு உதவுவதுதான் உத்தமமான செயலாகும்.

# போக்குவரத்து சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையை கருத்திற் கொண்டு வெளிமாவட்டங்களிலிருந்து கொழும்பு வரும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களின் போக்குவரத்து சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் அசோக்க அபேசிங்க அறிவித்துள்ளார். இதற்கு அமைவாக இரவு தபால் ரயில் சேவைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (மு-3)

# மதத் தலைவர்கள் நேற்று அவசர சந்திப்பு

(கொழும்பு)

குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து மதத் தலைவர்களுக்கு இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் இஸ்லாமிய மதத் தலைவர்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கர்தினால் ஆண்டகையின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது. இந்த சந்திப்பில் முஸ்லிம் அரசியல்வாதிகள் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், கபீர் ஹாசீம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம். மரிக்கார், முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட அரசியல்வாதிகள் சிலரும் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மு-3)

## குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்களை மட்டக்களப்பு வைத்தியசாலையில் விக்னேஸ்வரன் நேரில் சென்று பார்வை

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு தேவாலயத்தில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பில் படுகாயமடைந்தவர்களை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இவருடன் தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடக உப செயலாளர் த.சித்தரன் மற்றும் மத்தியகுழு உறுப்பினர்களான எஸ்.சோமசுந்தரம், இரா.மயூதரன், கிருஸ்ண மேனன் ஆகியோர் உடன் சென்றிருந்தனர்.

கல்முனையில் நேற்று நடைபெறவிருந்த நடைபவனிப் பேரணிக்கு வலுச்சேர்ப்பதற்காக சி.வி.விக்னேஸ்வரன் மட்டக்களப்பு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-3)

# மன்னார் முருங்கன் பகுதியில் கடை உடைப்பு; ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் முருங்கன் பகுதியில் மூன்று பேர் கொண்ட குழு ஒன்றினால் கடை ஒன்று உடைக்கப்பட்டு திருட்டு இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளதோடுமேலும் இருவரை தேடி வருகின்றனர். (மு-286)

# எரிபொருள் நிரப்பு நிலையம் நிறுத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நேற்று இடம் பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதையடுத்து யாழில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பொலிஸாரால் நிறுத்தப்பட்டன.

கொழும்பு, மட்டக்களப்பு பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வடமராட்சியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் முதலில் பொலிஸார் நிறுத்தினர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்ப வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். (ம-60)

# சாவகச்சேரி 5 மணியுடன் முடங்கியது

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளை அடுத்து அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் சாவகச்சேரி நகர்ப்பகுதி மாலை 5 மணியுடன் முடங்கியது.

உணவகங்கள் மற்றும் மதுபானசாலைகள் என அனைத்து வர்த்தக நிலையங்களும் மாலை 5 மணியுடன் பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய மூடப்பட்டன.

அத்துடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களும் சனத்திரளில் நிரம்பி வழிந்து காணப்பட்டன. பொலிஸார் சாவகச்சேரி நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீண்ட காலத்திற்கு பின்னர் பொதுமக்கள் பதற்றமான ஓர் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். (ம-30)

# யாழ். மக்கள் பதற்றம் அடைய வேண்டாம்

## கட்டளைத் தளபதி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் குண்டுவெடிப்புகள் தொடர்பாக பதற்றம் அடைய தேவை இல்லை என்று இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இவர் இது தொடர்பாக விடுத்து உள்ள ஊடக அறிக்கை வருமாறு,

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் குண்டுவெடிப்புகள் தொடரபாக பதற்றம் அடைய தேவை இல்லை. அமைதியாகவும், ஆசுவாசமாகவும் இருக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர். இவ்வாறான தருணங்களில் உண்மைக்கு புறம்பான தகவல்கள் பலவும் வேகமாக பரவுவது இயல்பானதுதான். எனவே வீண் வதந்திகளுக்கு பலிக்கடாக்கள் ஆக வேண்டாம் என்றும் கேட்கப்படுகின்றனர்.

பொலிஸ், இராணுவம் ஆகியன யாழ்.மாவட்ட மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுத்து உஷார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர். இவ்விடயத்தில் பொலிஸாருக்கும், இராணுவத்துக்கும் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். ஏதேனும் அசம்பாவிதங்கள் உணரப்படுகின்ற பட்சத்தில் உடனடியாக தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறும் கோரப்படுகின்றனர்.

குருநகரில் வெடிப்பு சம்பவம் ஒன்று இடம் பெற்றதாக தகவல் பரவியது. ஆயினும் அவ்வாறு எதுவும் உண்மையில் நடக்கவில்லை என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டு உள்ளது. (மு-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உலக சகோதரத்துவம்



மூன்று மறைபொருள்களாகிய தெய்வம், உயிர், சீவகாந்தம் ஆகிய இவற்றைப் பற்றிச் சரியாக விளங்கிக் கொள்ளாததனாலேயே, மனித இனம் பெரும்பாலும் முடிவில்லாத துன்பத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. கல்வி முறையின் மூலமாக இந்த மூன்று மறைபொருள்களைப் பற்றிய விளக்கமானது தெளிவாக எல்லோருக்கும் கொடுக்கப்பட்டால் தான், மனித இன முன்னேற்றம் என்பது நடைமுறையில் சாத்தியமாகும்.

ஒவ்வொரு தனி நபரும், பொருளாதாரம், அரசியல், சுகாதாரம், அறிவியல் ஆகிய பல்வேறு கோணங்களிலே இந்தப் பரந்த உலகத்தோடு ஒரு இடைவிடாத தொடர்பை எப்போதும் வைத்துக் கொண்டிருக்கிறார். யாராவது ஒரு தனி நபர் இத்தகைய அறிவு விளக்கத்திலோ அல்லது வாழ்க்கை ஒழுக்கத்திலோ பின்தங்கி இருப்பாரானால், அது தொடர் நிகழ்ச்சி போல குடும்பம், சமுதாயம், உலகம் என்ற அளவில் மனித குலத்துக்குப் பெரிய அளவில் மிக மோசமான பாதிப்பை உண்டாக்கும்.

ஆகவே, உலகில் வாழும் ஒவ்வொருவரின் நலத்திற்காகவும், மனித சமுதாயம் முழுவதும் அறிவு வளமும், மன வளமும், உடல் நலமும் நிறைந்ததாக இருக்க வேண்டும். உலக சகோதரத்துவம் (ருளைநசளயட டீசழவாநசாழழன) என்பது ஒரு பேச்சளவில் இருக்கிற கொள்கையாக இருக்கக் கூடாது. அது மெய்ஞ்ஞானிகளாலும், விஞ்ஞானிகளாலும், சிந்தனையாளர்களாலும் வரையறுத்துச் சொல்லப்பட்ட உண்மை உணர்வாக இருக்க வேண்டும். உலகில் வாழும் ஒவ்வொரு மனிதருடைய அறிவும் அறிவாக அறிவாட்சித் தரமாக அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபிராஜ் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி இறுதிப் போட்டியில் வதிரி சிறிமுருகன் அணி




கரவெட்டி தில்லையம்பல பிள்ளையார் ஆலய பூசகர் திரு வம்பலம் கபிராஜ் ஞாபகார்த் தமாக கபி ஞாபகார்த்த குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஜெ.துசா ந்தன் தலைமையில் 21 வயதுப் பிரிவினருக்கான மாவட்ட மட்ட த்தில் நடைபெற்ற துடுப்பாட்டத் தில் வதிரி சிறிமுருகன் அணி யினர் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றனர்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வதிரி சிறிமுருகன் அணியினர் கரவெட்டி மகேசன் அணியை 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய வதிரி சிறிமுருகன் அணியினர் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறை வில் 3 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களை பெற்றனர். இவ் வணிசார்பாக அதிக பட்சமாக கிசாந் 4 ஆறு ஓட்டங்கள் உள்ள டங்கலாக 30 ஓட்டங்களையும் கிரிசாந் 2 ஆறு ஓட்டம் உள்ள டங்கலாக 16 ஓட்டங்களை பெற் றனர்.

78 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகேசன் அணி யினர் ஐந்து பந்து பரிமாற்றம் நிறைவில் 68 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். இவ் வணி சார்பாக சஞ்சீவன் 9 ஆறு ஓட்டம் உள்ளடங்கலாக 56 ஓட்டங் களை பெற்றார். இவ் வகையில் வதிரி சிறிமுருகன் அணியினர் 09 ஓட்டங்களால் வெற்றி பெற்ற னர்.

இறுதிப்போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு கரவெட்டி விக் னேஸ் வரா கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். இறுதிப்போட் டியில் அல்வாயூர் அணியை எதிர்த்து வதிரி சிறிமுருகன் அணியினர் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

## ஸ்கந்தாவின் ஆண்டுவிழா துடுப்பாட்டம் மகாஜனாவுக்கு 8 விக்கெட்களால் இலகு வெற்றி

சுன்னாகம் ஸ்கந்தவரோ தயக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் கல் லூரியின் கடினப்பந்து கிரிக்கெட் டின் 75 ஆவது ஆண்டு நிறைவு ஆகியவற்றை கொண்டாடும் வகையில், வடமாகாண பாடசா லைகளின் 19 வயதுப்பிரிவு அணி களுக்கிடையில் ரி - 20 கிரிக் கெட் சுற்றுப்போட்டியொன்று நடத்தப்படுகின்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோ தயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும், இந்தச் சுற்றுப் போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த 16 பாடசாலைகளின் துடுப்பாட்ட அணிகள் பங்குபற்று கின்றன.

முதற்சுற்று ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனாக் கல் லூரி அணியை எதிர்த்து மன் னார் சித்திவிநாயகர் பாடசாலை அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் சித்திவிநாயகர், 15 ஓவர்களில் 94 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந் தது. துடுப்பாட்டத்தில் கதுஸன் 24, ஆரவ் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மகாஜனா அணி சார்பாக, சிவகரன் 21 ஓட்டங்க ளுக்கு 4 விக்கெட்களையும், சதுஜன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

95 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதி லளித்தாடிய மகாஜனாக் கல்லூரி அணி, 9.2 ஓவர்களில் 2 விக் கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கிரிசாந்த் 43, மதீஸன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (க-26)

## இரண்டாவது வெற்றியை பதிவு செய்தது ஆதிசக்தி



லண்டன் வல்வை புளூஸ் நண்பர்களின் அனுசரணை யுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான மாபெரும் உதைபந்தாட்ட தொடர் நடை பெற்று வருகின்றது.

யங்கம்பன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது போட் டியில் ஆதிசக்தி மற்றும் நவசக்தி அணிகள் மோதின.

இப் போட்டியில் ஆதிசக்தி அணி 3:2 என்ற கோல் கண க்கில் வெற்றி பெற்று இர ண்டாவது வெற்றியை பதிவு செய் தது. (க)

## பிரதேச செயலக எல்லே போட்டி கோப்பாய் பிரதேச செயலக அணி சம்பியன்




யாழ்.மாவட்ட செயலகத்திற்கு உட்பட்ட பிரதேச செயலக அணி களுக்கு இடையிலான பெண் களுக்கான எல்லே சுற்றுப் போட் டியில் கோப்பாய் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை அராலி, மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர் த்து சங்கானை பிரதேச செயலக அணி மோதியது. முதலில் துடுப்பெடு த்தாடிய சங்கானை பிரதேச செய லக அணி இரு ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கோப்பாய் பிரதேச செயலக அணி 3 ஓட்ட ங்களை பெற்றுச் சம்பியன் கிண் ணத்தை கைப்பற்றியது. (க-60)

## வளர்மதி தாச்சி தொடர் இறுதியில் குமரநகர்-நாவற்குழி சரஸ்வதி

கைதடி வளர்மதி விளை யாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டியின் லீக் சுற்று முடிவில் கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மற்றும் நாவற்குழி சரஸ்வதி விளையா ட்டுக் கழகம் புள்ளிப் பட்டியலில் முத லாம் மற்றும் இரண்டாம் இடங் களைப் பெற்று இறுதிப் போட்டி க்கு முன்னேறியுள்ளன. (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டுவெடிப்பு...

பெர்ணான்டோ தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே இவ்விடயத்தைக் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு தொடர்பாக பல வழிகளில் தயார்படுத்தல்களை மேற்கொண்டிருந்த நிலையில் இந்த குண்டு வெடிப்புகள் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதே வேளை இந்த தாக்குதல் குறித்து 10 நாட்களுக்கு முன்பே பொலிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது. முக்கியமான தேவாலயங்களை குறிவைத்து தாக்குதல் நடக்க உள்ளதாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர 10 நாட்களுக்கு முன்பே எச்சரிக்கை விடுத்திருந்தது தெரிய வந்துள்ளது.

கடந்த 11ஆம் திகதி, உளவுத்துறை எச்சரிக்கையை அவர் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார். ஒரு அமைப்பு, முக்கியமான தேவாலயங்களையும், கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தையும் குறிவைத்து தற்கொலை தாக்குதல் நடத்த உள்ளதாக வெளிநாட்டு (இந்திய) உளவு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு கடந்த ஆண்டு நடந்த புத்தர் சிலைகள் உடைப்பு மூலம் பலருக்கும் தெரிய வந்த இயக்கம் ஆகும்.

இதேவேளை இப்போது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எந்த ஒரு இயக்கமும் இன்னும் பொறுப்பு ஏற்கவில்லை.

இதற்கிடையே ஒரே இயக்கத்தை சேர்ந்தவர்கள் தாக்கு தலை நடத்தியுள்ளனர் என அரசு தரப்பில் இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-3)

## 35 வெளிநாட்ட...

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்த பின் இங்கு நடக்கும் மிகப்பெரிய தாக்குதலாக நேற்றைய தாக்குதல் கருதப்படுகிறது.

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு கட்டான தேவாலயம், சங்கரிலா, கிங்ஸ்பரி, சினமன் கிரான்ட் ஆகிய நட்சத்திர விடுதிகள் மற்றும் மட்டக்களப்பு, தெமட்டகொட, தெஹிவளை ஆகிய எட்டு இடங்களில் குண்டு வெடிப்புகளும் தற்கொலைத் தாக்குதல்களும் நிகழ்ந்திருக்கின்றன.

நேற்றுக் காலை 8.45 மணிக்கும் 9.30 மணிக்கும் இடையில் இந்த குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

முதல் ஆறு சம்பவங்களில் பெரும்பாலானவை தற்கொலைத் தாக்குதல்கள் என பொலிஸாரால் சந்தேகிக்கப்படுகின்றது.

அத்துடன் பிற்பகல் 1.45 மணியளவில் தெஹிவளை பொலிஸ் பிரிவின் மிருகக்காட்சிசாலைக்கு முன்பாக உள்ள ஹோட்டலில் குண்டு வெடிப்பு ஒன்று இடம்பெற்றதுடன் பின்னர் 2.30 மணியளவில், தெமட்டகொட பொலிஸ் பிரிவில் குண்டுவெடிப்புடன் தொடர்புடையதாக கூறப்படும் சந்தேக நபர்கள் தொடர்பிலான விசாரணைக்கு சென்ற கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் மூவர் தெமட்டகொட மஹவில பூங்கா பகுதி சொகுசு வீட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்ததாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார். (மு-3)

# குண்டு வெடிப்பு தொடர்பில்

# அரச தலைவர்கள் அலரிமாளிகையில் நேற்று விசேட கலந்துரையாடல்





(கொழும்பு)

நாட்டில் தொடரும் குண்டு வெடிப்புக்களை அடுத்து எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரணிலுடன் அலரிமாளிகையில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார். குறித்த சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பேச்சாளர் சுமந்திரன் மற்றும் சபாநாயகர் கரு ஜய சூரியவும் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது கட்சி அரசியலை ஒதுக்கி வைத்து அனைவரையும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது. (மு-3)

# ஊரடங்குச் சட்டம் தொடரும்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் பதற்ற நிலையினால் அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் ஊடரங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரும் வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற தொடர்ச்சியான குண்டு வெடிப்பு சம்பவங்களையடுத்து பாதுகாப்பினை கருத்திற் கொண்டு பொலிஸ் ஊடரங்குச் சட்டம் நேற்று பிற்பகல் அமுல்படுத்தப்பட்டதுடன், அந்த ஊடரங்குச் சட்டம் இன்று காலை 6.00 மணி வரை அமுலில் இருக்கும் என பொலிஸ் ஊடகம் அறிவித்திருந்தது.

இந் நிலையிலேயே பின்னர் வெளியாகியுள்ள தகவலின்படி மறு அறிவித்தல் வரும் வரையில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என பொலிஸ் ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (மு-3)

## மட்டு. தேவா...

வல் வெளியாகியுள்ளது.

குண்டு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றினை கொண்டே இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம்எனவும், அதனை தற்கொலைதாரியொருவர் கொண்டுவந்து தாக்கியிருக்கலாம் எனவும் பாதுகாப்பு தரப்பில் இருந்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்திற்குள் வந்த நபர் ஒருவரை சந்தேகம் கொண்ட தேவாலய ஊழியர்கள் அவரை வெளியேற்றிய நிலையிலேயே குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சம்பவத்தினை கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

**கொழும்பில் தற்கொலை குண்டு தாக்குதல் நடத்தியவர் குறித்த தகவல் வெளியானது!**

கொழும்பில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலை மேற்கொண்டவர் குறித்த தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

இதன்படி, கொழும்பு ஷங்ரிலா நட்சத்திர விடுதியில் ஷ்ஹ்ரான் ஹாசிம் (zahran hashim) என்ற நபரே தற்கொலை குண்டு தாக்குதலை நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (மு-3)

## தாக்குதல்தாரி...

குழுவின் பெயரை வெளியிட வேண்டாம் என்று கேட்டுள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன பொதுமக்களுக்கு உண்மை வெளிப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (மு-3)

## அமைச்சர் வெளி...

மொஹமட் சஹ்ரான் தலைமையிலான தேசிய தௌஹீத் ஜமாத் என்ற அடிப்படைவாத அமைப்பு இலங்கையில் பல தாக்குதல்களை நடத்த திட்டமிட்டிருந்தது.

இந்த தாக்குதல் திட்டம் குறித்து முன்கூட்டியே புலனாய்வு பிரிவு அறிவுறுத்தி இருந்தது என்ற தகவலை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் இந்த அச்சுறுத்தல் குறித்த ஆவணங்கள் உண்மை என அமைச்சரும் உறுதிப்படுத்தியுள்ளார். (மு-3)

## நீர் கொழும்பில்...

நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய கத்தோலிக்க தேவாலயத்தில் நடந்த குண்டுத் தாக்குதலை நடத்தியவர் என சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரின் புகைப்படம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நபரே பை ஒன்றில் கொண்டு வந்த குண்டை கட்டுவப்பிட்டிய தேவாலயத்திற்குள் வெடிக்க செய்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

மேலும் குறித்த தாக்குதல் தற்கொலை தாக்குதல் என்றும் கூறப்படுகின்றது. இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றைய தாக்குதலில் நீர்கொழும்பு தாக்குதலிலேயே அதிகமானோர் உயிரிழந்தனர். இத்தாக்குதலில் 111 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-3)

# யாராக இருப்பினும் உயர்ந்த பட்ச தண்டனை

## பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

பலருடைய உயிர்களைக் கைப்பற்றக் காரணமாக இருந்த வெடிப்புச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், தயவு தாட்சண்யம் இன்றி கைது செய்து சட்ட நடவடிக்கையை முன்னெடுக்க பாதுகாப்புப் பிரிவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற தேவாலயத்துக்கு விஜயம் செய்த பிரதமர் அங்குள்ள சேதங்களைப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறினார்.

இந்த நாசகார செயற்பாடுகள் நாட்டையும் நாட்டின் பொருளாதாரத்தையும் சீர்குலைக்கும் பாரிய திட்டமிட்ட நடவடிக்கைகளாகும் என நான் கருதுகின்றேன். இந்தத் தாக்குதல்களை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். சட்டத்தைப் பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த பதற்ற நிலைமையில் பொறுமையாக இருந்து சமாதானத்தைப் பாதுகாக்க முயற்சிப்போம் எனவும் பிரதமர் மேலும் கேட்டுக் கொண்டார். (மு-3)

## விசாரணை சி.ஐ...

தெமட்டகொடை மேம்பாலத்திற்கு அருகில் அமைந்துள்ள மஹவில ஒழுங்கை பகுதியில் உள்ள வீடொன்றை பொலிஸார் சோதனையிட்டனர்.

பொலிஸார் சந்தேகத்திற்கிடமான வீட்டை சோதனையிட சென்ற போது திடீரென வீட்டுக்குள் வெடிப்புச் சம்பவம் நடந்துள்ளதுடன் அதில் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கொல்லப்பட்டனர். மற்றுமொரு பொலிஸ் உத்தியோகஸ்தர் காயமடைந்துள்ளார்.

பின்னர் நடத்திய சோதனையில் வீட்டில் பெண் உட்பட மூவரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

அதேவேளை நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால், அத்தியாவசிய கடமைகளுக்கு செல்லும் நபர்கள் தமது தொழில் ரீதியான அடையாள அட்டைகளை பயன்படுத்தி தேவையான பயணங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் உதாரணமாக விமான நிலையத்தில் பணியாற்றுவோர் தமது நிறுவனத்தின் அடையாள அட்டையை காண்பித்து செல்ல முடியும் எனவும் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்து பொலிஸாரின் விடுமுறைகளை இரத்துச் செய்ய பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (மு-3)

# புலிகளின் காலத்தில் கூட இவ்வாறு தாக்குதல் இல்லை

## எச்.எம்.பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான உள்நாட்டு போரின்போதுகூட, ஒரே நாளில் சுமார் 8 குண்டுவெடிப்புச் சம்பவங்கள் பதிவாகவில்லையென முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனை அந்தோனியார் ஆலய குண்டுவெடிப்பைத் தொடர்ந்து அங்கு சென்று நிலைமைகளை பார்வையிட்ட அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சமய வழிபாடுகள் நடைபெற்ற இடத்தில் இவ்வாறு தாக்குதல் நடத்தியமை மிலேச்சத்தனமானதென குறிப்பிட்ட பௌசி, சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டுமென பௌசி வலியுறுத்தியுள்ளார். (மு-3)

# பாராளுமன்றம் நாளை கூடுகிறது

(கொழும்பு)

நாட்டில் நேற்றுக் காலை 6 இடங்களில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களையடுத்து பாராளுமன்றம் நாளை செவ்வாய்க்கிழமை அவசரமாக கூட்டப்படுகிறது. இது தொடர்பான அழைப்பை சபாநாயகர் கரு ஜயசூர்ய விடுப்பார் என்று அரசு அறிவித்துள்ளது.

நாடாளுமன்றம் அடுத்த மாதமே இடம்பெற திட்டமிடப்பட்டிருந்த போதும் அவசர நிலையைக் கருத்திற் கொண்டு நாளை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# கட்டுநாயக்கா விமான நிலையம் அருகே வெடிக்காத நிலையில் குண்டு மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அருகே இருந்து நேற்று வெடிகுண்டு மீட்கப்பட்டுள்ளது.

பிவீசி குழாய் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விமானப்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள விமானப்படை குறித்த குண்டு உள்ளூரில் தயாரிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளனர். (ம-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சிறுநீரகம் தேவை

B அல்லது O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

**தொடர்புகளுக்கு : 076 239 9874** (8546)

## தேவை

சமையல் வேலைக்கு தனியாகவோ அல்லது கணவன் மனைவி சேர்ந்தோ சேர்த்துக் கொள்ளப்படுவர். தங்குமிடம், சாப்பாடு இலவசம்.

**தொடர்புகளுக்கு : 077 456 3959** (C-6186)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

© 0768226240 V2 TRAVELS (C-6164)

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


# ஐ.நா. செயலர் கண்டனம்

(ஜெனிவா)

இலங்கையின் பல இடங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டேரிஸ் தனது டுவிட்டர் பக்கத்தில் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

அதனுடன் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று ஒரு புனித நாளிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை தனக்கு மிகுந்த கவலையளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (மு)


## TAXATION WORKSHOP

Specially Designed for Accountancy Students

It is being arranged to have an exam oriented workshop on Taxation. The workshop will help the participants to enhance their knowledge on taxation.

DATE : 04th & 05th Of May 2019

TIME : 8.30 AM TO 5.00 PM

VENUE : Veerasingam hall, Jaffna.

RESOURCE PERSON
: Mr. V. Sivagurunathan
Partner,
Consultants' Consortium

Registration on a first-come first-served basis. Reserve your seats soon.

Contact : Mr. K. Kupenthiran
Manager
JA Partners
021-222-7050 / 077-776-9262

**Nominal amount of Rs. 1,500/- will be charged per participant for logistical arrangements.** (8544)

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-6174)

விசேட விலைக்கழிவு

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5574145
077 2931062
077 6655413

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (8540)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்


10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

© 021 222 3536 (C-6173)


# மரண அறிவித்தல்



## கிட்டிணன் இராசரத்தினம்

பிறப்பு : 09.02.1951 இறப்பு : 19.04.2019

பலாலியை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் இராசரத்தினம் 19.04.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டிணன் - சீதேவி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - அன்னம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கரத்தினத்தின் பாசமிகு கணவரும், ரகுநாதன் (கனடா), ஜெயநாதன் (நாதன் காட்வெயார்), யோகநாதன் (லண்டன்), கமலநாதன், நிமலநாதன், அனுசா (லண்டன்), அனுதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாந்தினி (கனடா), சுபாஜினி, சர்மினி (லண்டன்), மதுரா (அச்சுவேலி யாழ்/திரேசா மகளிர் கல்லூரி - ஆசிரியை), றஜீவா, தயாளன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், டதுசனா, அக்ஷயா, இஷானிக்கா, ஜினோசன், கிஷானா, றஜிஸ்னா, டிசாரா, டிலுக்ஷன், மோனிக்கா, தரனீஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2019) திங்கட்கிழமை 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை, சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

219, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 5884, 077 977 3264
தகவல் : குடும்பத்தினர்

(8547)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org